மலர்-5 இதழ்-133 1 - 15 மார்ச் 2022 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

விருப்ப சந்தா

AANMEEGA MALAR TRUST

மாதமிருமுறை



e-magazine
www.aanmeegamalar.com

## சிவராத்திரி ஸ்பெஷல்

## காதலியை கரம் பிடித்த சிவபெருமான்

# தேன் அபிஷேகம் செய்தால் சர்க்கரைநோயை போக்கும் ஈசன்

# சிவராத்திரி விரதம் தொடங்கும் முறை

மகா சிவராத்திரி தினத்தில் விரதம் இருந்து சிவ வழிபாடு செய்வது அவசியம். விரதத்தை மேற்கொள்வோர் சிவ ராத்திரி அதிகாலையிலோ அல்லது முதல் நாளோ வீட்டை சுத்தம் செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

எந்த ஒரு விரதத்தை தொடங்குவதற்கு முன் ஒரு நூலை மஞ்சளைத் தடவி, மஞ்சள் நூலாக்கி அதை கையில் கட்டிக் கொள்ளுங்கள். இந்த மஞ்சள் நூலை கட்டிக் கொண்டால் விரதம் ஆரம்பம் என பொருள்.

காலையில் நம் பூஜை அறையில் விளக்கேற்றி வழிபட்டு விரதத்தை தொடங்கலாம். அன்று முழுவதும் விரதமிருந்து, அன்று மாலை முதல் சிவ பூஜை செய்ய வேண்டியது அவசியம்.

இரவு முழுவதும் கண்விழித்துச் சிவ ஆராதனை செய்யப் போகிறவர்கள் இரவில் சிவ லிங்கத்திற்கு ஐந்து முறை அல்லது மூன்று முறை பூஜைகள் செய்ய வேண்டும்.

மூன்று பூஜைகள் செய்ய நினைப்பவர்கள் இரவு 7 மணிக்கு ஒரு பூஜை, 12 மணிக்கு பின் ஒரு பூஜை, பிரம்ம முகூர்த்தத்தில் ஒரு பூஜை செய்ய வேண்டும்.

## சிவராத்திரி தினத்தில் சிவபக்தர்கள் அவசியம் செய்ய வேண்டியவை

சிவராத்திரியில் உச்சரிக்கும் மந்திரங்களுக்கு அதிகப்படியான பலன்கள் கிடைக்கும்.

சிவ புராணம், கோளாறு பதிகம் படித்தல், லிங்காஷ்டகம், பஞ்சாட்சர ஸ்தோத்திரம் படிக்கலாம். அதோடு நடராஜர் பத்து, பரமசிவ ஸ்தோத்திரத்தைப் படிக்கலாம்.

திருமந்திரம் படித்தலும், பஞ்சாட்சர மந்திரம் உச்சரித்தல் மிக நல்லது.

மற்ற நாட்களில் பஞ்சாட்சர மந்திரத்தை உச்சரித்தால் கிடைக்கும் பலனை காட்டிலும், சிவ ராத்திரி தினத்தில் உச்சரிக்க நூறு மடங்கு சிவ அருட்காட்சம் கிடைக்கும்.



## சிவராத்திரியன்று நடைபெற்ற அற்புத நிகழ்வுகள்



மாசி மாத சதுர்த்தசி திதியில் வருவது மகா சிவராத்திரி, ஒவ்வொரு மாதமும் தேய்பிறை நாளில் வரும் சதுர்த்தசி திதி மாத சிவராத்திரி.

சிவராத்திரி தினத்தில் நடைபெற்ற நிகழ்வுகள்

அன்னை உமையாளுக்காக சரீரத்திலும் பாதி சிவன் தந்த நிகழ்வு நடைபெற்றது.

சிவபெருமான் சிவராத்திரி தினத்தில்தான் அர்த்தநாதீஸ்வரராக மாறி காட்சியளித்தார்.

அர்ஜூனன் செய்த கடும் தவத்தால் சிவ ராத்திரி தினத்தில்தான் பாசுபதம் என்னும் அஸ்திரத்தை பெற்று போரில் வென்றான்.

கண்ணப்ப நாயனார் சிவகதி என் னும் முக்தி அடைந்தது இதே நாளில்தான்.

பகீரதன் தவப்பலனாக கங்கையை பாரிக்கு தந்தது இதே தினத்தில்தான்.

மார்க்கண்டேயன்பக்திக்கு கட்டுப்பட்ட ஈசன், எமன் வீசிய பாச கயிற்றை பஸ்பமாக்கியதும் சிவராத்திரி யன்றுதான்.

# காதலியை கரம் பிடித்த சிவபெருமான்

## கடன், ஆணவம், பொய் ஆகியவற்றை தீர்க்கும் அற்புதத் திருக்கோவில்



திருவள்ளூர் அருகே திருப்பாச்சூர் என்ற இடத்தில் உள்ளது அருள்மிகு தங்காதலி வாசீஸ்வரர். மிக மிக பழமையான கோவில். இந்த கோவில் வரலாறை படித்தால் ஆச்சர்யம் காத்திருக்கிறது.

திருவள்ளூர் மாவட்டம், சென்னை அரக்கோணம் ரெயில் மார்க்கத்தில் திருவள்ளூர் ரெயில் நிலையத்திலிருந்து 5 கி.மீ., திருவள்ளூர் பேருந்து நிலையத்திலிருந்து 3 கி.மீ. தொலைவில் திருப்பாச்சூர் உள்ளது.

இக்கோவில் ஆதிசங்கரர் கையால் கல்லில் வரைந்த ஸ்ரீ சக்கரம் உள்ளது. இச்சக்கரத்தை வரைந்த பின்னரே இக்கோவில் அடிக்கல் நாட்டப்பட்டதாம்.

சிவபெருமானின் உத்தரவை மீறி, தட்சன் நடத்திய யாகத்திற்குச் சென்றாள், தாட்சாயணி. இதனால் சிவபெருமானின் சாபத்திற்கு ஆளாகி, மீண்டும் சாதாரணப் பெண்ணாக பூமியில் பிறக்கும் நிலைக்கு தள்ளப்பட்டாள். அவள் பூமியில் பிறந்து, சிவபெருமானை நினைத்து கடும் தவம் புரிந்தாள்.

அம்பாளின் தவத்திற்கு பலனாக "தன் காதலியே நான் வந்துவிட்டேன்" என சிவன் கூறி அம்பாளை ஆட்கொண்ட ஸ்தலம் தான் தங்காதலி உடனாய வாசீஸ்வரர் கோவில் இங்குள்ள இறைவனையும், இறைவியையும் வழிபாடு செய்து வந்தால், தம்பதியரிடையே ஒற்றுமை கூடும்.

மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம், தவம் ஆகிய ஐம்பெரும் சிறப்பம்சங்களோடு, மூவரால் பாடல் பெற்ற புராணப் பெருமைகளையும் கொண்டது இந்த ஆலயம். தேவாரப் பாடல்பெற்ற தொண்டை நாட்டுத் தலங்களுள் இது 16வது தலம்.

இத்தலத்து விநாயகருக்கும் மிகுந்த சிறப்பு உள்ளது.

திரிபுராந்தர்களை அழிக்கச்சென்ற சிவன், விநாயகரை வணங்காமல் புறப்பட்டு விட்டார். இதனால் வழியில் தேர் சக்கரத்தின் அச்சு முறிந்து விட்டது. அத்தோடு ஒரு சபையை அமைத்த விநாயகர், 'தம்மை வணங்காமல் சென்றது ஏன்?' என்று சிவபெருமானிடம் விசாரணை செய்தார்.

அதனடிப்படையில் இவ்வாலயத்தில் 11 விநாயகர்கள் வீற்றிருக்கும் 'விநாயகர் சபை' இருக்கிறது. இந்த ஏகாதச விநாயகர் சபை வழிபாடு மிகுந்த பலனளிக்கக்கூடியது.

தம் திருமணத்தின்போது குபேரனிடம், வெங்கடாஜலபதி கடன் வாங்கினார். எவ்வளவு முயற்சித்தும் கடனை அடைக்க முடியவில்லை. இதற்கு காரணம் என்ன என்று தெரிந்து கொள்வதற்காக, வெங்கடாஜலபதி சிவபெருமானை வழிபட்டார்.

அதற்கு ஈசன், "திருமணத்தின்போது 'பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க' என வாழ்த்துவார்கள். 16 என்பது பதினாறு வகை

செல்வங்களைக் குறிக்கும். நீங்கள் மச்ச அவதாரத் தின்போது அசுரர்களைக் கொன்றதால் ஏற்பட்ட தோஷம் காரணமாக, 11 வகை செல்வங்களை இழந்துவிட்டீர்கள். இப்போது ஐந்து வகை செல்வங்களே தங்களிடம் உள்ளன.

இழந்த செல்வங்களைப் பெற விநாயகர் சபையிலுள்ள வலம்புரி விநாயகருக்கு 11 தேங் காய் கொண்டு தொடுக்கப்பட்ட மாலை, 11 வாழைப்பழம் கொண்டு தொடுக்கப்பட்ட மாலை, ஒரு அருகம்புல் மாலை அணிவித்து, 11 நெய் தீபமேற்றி பிரார்த்தித்துக் கொண்டால் மூன்று மாதங்களுக்குள் இழந்த சொத்துகளைத் திரும்பப் பெறலாம். அதன் மூலம் கடனை அடைக்க வழி பிறக்கும்'' என்று அறிவுறுத்தினார்.

அதன்படி வெங்கடாஜலபதி இந்த விநாயகர் சபையில் வழிபாடுகளை மேற்கொண்டாராம்,

இந்த விநாயகர் சபை வழிபாட்டை மேற்கொண்ட பிறகுதான் திருப்பதி வெங்கடாஜலபதி தம் திரு மணத்திற்காக வாங்கிய கடனை அடைக்க, வழிபிறந்தது என்றும் ஸதல வரலாற்றில் கூறப் படுகிறது.

ஆகவே கடன் பிரச்சனைகளில் தவிப்பவர்கள் இத்தலத்து விநாயகருக்கு சிவன் கூறிய வழி முறைகள்படி பிரார்த்தித்தால் பலன் நிச்சயம் கிடைக்கும்.

இக்கோவில் 5000 வருட பழமையான மூங்கில் உள்ளது. மூங்கிலின் உள்ளே தான் சிவன் சுயம்புவாக உருவானார். மேலும் இக்கோவில் சிவ பெருமான் வாசி என்ற கோடாரியால் மூங்கி லுக்கு கீழே எடுக்கும் போது அவர் மீது இரத்தம் வந்துவிட்டது.

ஆதலால் இக்கோவில் சிவலிங்கை தொடாமல் தான் பூஜை செய்கிறார்கள். பசு ஒன்று யாருக் கும் தெரியாமல் சிவனுக்கு பால் சுரந்து கொடுக் குமாம், அப்போது மூங்கில் தானாக விலகி சிவலிங்கத்தை பசுவுக்கு காட்டுமாம்.

இந்தக் கோவிலை கரிகால் பெருவளத்தான் கட்டிய தாக கூறப்படுகிறது. குறும்பன் என்ற சிற்றரசன், கரிகால் பெருவளத்தானுக்குக் கப்பம் கட்டி ஆட்சிசெய்து வந்தான். திடீரென கப்பம் செலுத்த மறுத்தான். இதனால் சிற்றரசன் மீது போர் தொடுத்தான், கரிகால் சோழன். குறும்பனும் தம் குலதெய்வமான காளி தேவியை வணங்கி போர் புரியத் தொடங்கினான். அவனுக்கு உதவியாக காளிதேவி விண்ணிலிருந்து அம்புகளை எய்து சோழர்படை வீரர்களை அழித்தாள்.

விண்ணிலிருந்து பாய்ந்து வந்த அம்புகளும், அவற்றை எய்யும் காளிதேவியும் சோழர்படை வீரர்கள் கண்களுக்குப் புலப்படவேயில்லை.

இதனால், அம்புகளை எதிர்கொள்ள முடியாமல் அனைத்து சோழர்படை வீரர்களும் போரில் கொல்லப்பட்டனர். சோழர் படைத்தளபதி மட்டும் உயிருடன் இருந்தார். அவரை வரவழைத்த குறும்பன், "உன் மன்னன் போருக்கு வந்தாலும் கொல்லப்படுவது உறுதி. இந்தத் தகவலை சொல்வதற்குத்தான் உன்னை உயிரோடு விட் டுள்ளேன். இதை கரிகாலனிடம் போய்ச் சொல்'' என்று திருப்பி அனுப்பினான்.

நடந்ததை கரிகாலனிடம் கூறினார் தளபதி. தம் படை வீரர்கள் மாண்டதையறிந்து வேதனையுற்ற கரிகாலன், படை திரட்டிக் கொண்டு போருக்கு விரைந்தான். கல்மூங்கில் புதர்கள் நிறைந்த இப் பகுதிக்கு வந்தபோது, சிற்றரசனுக்கு தம்முடைய படையை தோற்கடிக்கும் பெரிய ஆற்றல் எப்படி வந்தது என்ற வியப்புடன், சிவபெருமானை நினைத்து வேண்டினான்.

அப்போது சிவபெருமான் அசரீரியாய் தன் பக்தனுக்கு ஆறுதல் கூறினார். "கவலைகொள்ள வேண்டாம் மன்னா.. நான் உன் அருகி லேயே இருக்கிறேன். சிற்றரசனுக்கு அவன் குலதெய்வம் காளிதேவி உதவிபுரிகிறாள்.



www.aanmeegamalar.com






## சிவராத்திரியன்று தாழம்பூ வழிபாடு

**சிவபெருமானின் தலைமுடியைக் கண்டதாகப் பொய் சொன்ன தாழம்பூவை பூஜைகளிலிருந்து ஒதுக்கிவைத்தார் சிவபெருமான். பின்னர் சிவனிடம் மன்னிப்புக்கேட்டு தாழம்பூ அடைக்கலம் வேண்டவே சிவராத்திரி நாளில் மட்டும் தனது பூஜைக்குப் பயன்படுத்தும்படி வரம் கொடுத்தார். அதனடிப்படையில் இக்கோவிலில் சிவராத்திரி அன்று மட்டும் இரவு ஒரு கால பூஜையில் மட்டும் தாழம்பூவை சிவனின் உச்சியில் வைத்துப் பூஜை செய்கின்றனர். இந்த பூஜையில் பங்கேற்று வழிபட்டால் ஆணவம், பொய் சொல்லும் குணம் நீங்கிவிடும்.**

உன்னை இங்கு வரவழைக்கவே இந்த நிகழ்வுகள் நடந்தேறின. குறும்பனுக்கு இந்த தகவல் தெரியாது. நான் சொன்ன பிறகு போரைத் தொடங்கு. நீ வெற்றி கொள்வாய்!” என்றார்.

பின்னர் ஆவேசமாகவுள்ள காளிதேவியை சாந்தப்படுத்த இரண்டு தங்கச் சங்கிலிகளுடன் நந்தியை அனுப்பினார் சிவபெருமான். தங்கச் சங்கிலியைக் கண்டதும் சினம் தணிந்து சிரித்தாள் காளி. அவளை தங்கச் சங்கிலியால் கட்டி அழைத்து வந்து, ஓரிடத்தில் உட்கார வைத்தார் நந்தி.

இதைத் தொடர்ந்து சிவபெருமான் கரிகாலனிடம், “இப்போது நீ போரைத் தொடங்கு” என்றார். மூங்கில் புதர்கள் மத்தியில் மறைந்திருந்தபடியே ஒற்றன் மூலம் போருக்கு தகவல் அனுப்பினான் கரிகாலன். குறும்பனும் போர்புரிய சம்மதித்தான். கடும்போரில் கரிகாலன் வெற்றிபெற்றான். போரில் தோற்ற குறும்பனின் சொத்துகள் அனைத்தையும் ஈசனுக்குரியதாக ஆக்கினான் கரிகாலன்.

தமக்கருகில் இருப்பதாய்ச்சொன்ன ஈசனை மூங்கில் காட்டுக்குள் தேடியலைந்தான். எங்கு தேடியும் ஈசன் தென்படவில்லை. அங்கிருந்த மூங்கில் காட்டில் வசித்த காட்டுவாசி களிடம் கேட்டான். அவர்கள், ‘சிவலிங்கம் இருக்குமிடம் எங்களுக்குத் தெரியாது. ஆனால் ஒரு புதருக்குள் பசு மாடு செல்லும். அப்போது மூங்கில் மரங்கள் விலகி நிற்கும். மாடு திரும்பிச் சென்றதும் மூங்கில் மரங்கள் தானாக மூடிவிடும்’ என்றுகூறி அந்த புதரைக் காட்டினர்.

அங்கு சென்று மூங்கில் வெட்ட பயன்படுத் தப்படும் ‘வாசி’ என்ற அரிவாளால் மூங்கில் மரத்தை வெட்டினான். திடீரென ரத்தம் பீறிட்டுக் கொண்டு வந்தது. திடுக்கிட்டு அருகில் சென்று பார்த்தான். சுயம்புலிங்கம் நெற்றியில் வெட்டுப் பட்டு ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. உள்ளம் உருக ஈசனிடம் மன்னிப்புக் கேட்டதும் ரத்தம் வடிவது நின்றது. இறைவனின் கருணைக்கு தாம் முற்றிலும் ஆட்பட்டுவிட்டோம் என்பதை அறிந்த கரிகாலன், அவ்விடத்திலேயே ஈசனுக்கு ஆலயம் நிர்மாணிக்க உறுதிபூண்டான்.


கீதா-ராஜன்

திருப்பணி நிறைவு பெற்று கம்பீரமாக ஆலயம் உருப்பெற்றது. 1500 ஆண்டு பழமை வாய்ந்த இந்த ஆலயத்தின் இறைவன் திருநாமம் வாசீஸ்வரர் ஆகும்.

இத்திருத்தலத்தில் அம்பாள் தினமும் ஈசனுக்கு அபிஷேகம்செய்து வழிபடுவதாக ஐதீகம். ஆகவே பிரதோஷத்தின் போதும், இதர உற்சவங்களின்போதும் முதலில் அம்பாளுக்கு அபிஷேகம் செய்யப்படுகிறது.

பின்னரே ஈசனுக்கு அபிஷேகம் நடைபெறும். அம்பாள் சிவனுக்கு வலப்புறம் உள்ளதால், இத்திருக்கோவில் திருமணத்தடை நீக்கும் தலமாக விளங்குகிறது.

இவ்வாலயத்தில் ஐயாயிரம் வருட பழமையான மூங்கில் மரம், தல விருட்சமாக உள்ளது.அர்த்த மண்ட பத்தில் ஆதிசங்கரர் பிரதிஷ்டைசெய்த ஸ்ரீசக்கரம் உள்ளது. வெளிப்பிரகாரத்தில், வடமேற் கில் சொர்ண காளி கிழக்கு நோக்கி வீற்றிருக்கிறார்.

– கீதாராஜன்

தொடர்பு எண்: 9444228203

# சிவனுக்குரிய அபிஷேக முறையும் பலனும்

**அபிஷேகம் செய்யும் அடிப்படை பொருட்கள்:**

பால், சந்தனம், விபூதி, பன்னீர், மஞ்ள், குங்குமம், இளநீர், பஞ் சாமிர்தம், வெட்டி வேர், வில்வ இலை அபிஷேகத்திற்கு முக்கிய பொருட்கள். இவற்றில் முக்கியமாக அனைத்து அபிஷேகத்தின் போதும் வில்வ இலை பயன்படுத்துவது அவசியம்.

சிவ லிங்கத்தை ஒரு தாம்பூலத் தட்டில் வைத்து அபி ஷேகம் செய்யவும்.

சிவ லிங்கம் மேல் முழுவதும் வில்வ இலையைப் போட்டு அர்ச்சித்து, நமசிவாய என்ற மந்திரத்தை சொல்லிய படியே அபிஷேகம் செய்ய வேண்டும்.

அதன் பின்னர் சிவ லிங்கத்தை எடுத்து வைத்து அலங்காரம் செய்யுங்கள்.

**சிவ லிங்கத்திற்கு விளக்கேற்றும் முறை:**

பொதுவாக சிவ லிங்கத்திற்கு விளக் கேற்று பவர்கள் ஒரு விளக்கில் இருபுறமும் தீபம் வரும் படி திரி போட்டு விளக்கேற்ற வேண்டும். ஒன்று சிவனை நோக்கியும், மற்றொன்று அவ ருக்கு எதிரில் அமர்ந்திருக்கும் நந்திக்காக இயற்றப்படுகிறது.

நந்தி ஒரு தூதுவரைப் போல, நாம் நினைப்பதை எல்லாம், சிவபெருமானிடம் முறையிட்டு வரத்தை வாங்கி தருவார். அதனால் தான் சிவனுக்கு தீபம் ஏற்றுபவர்கள் நந்திதேவருக்கும் சேர்த்து விளக்கேற்றுவது அவசியம்.

இரவெல்லாம் சிவனுக்கு அபி ஷேக, ஆராதனை செய்து, அலங் காரம் செய் வார்கள்.

பல திருக்கோயில்களில்சிவராத்திரி அபிஷேகம் முடிந்து பிரம்ம முகூர்த் தத்தில் அலங்காரம் செய்வது வழக்கம். குறிப்பாக எல்லா காய்கறி மாலையாகவும், பூக்களால் அலங்காரமும் செய்வார்கள்.

சில கோயில்களில் அண்ணத்தால் அலங் காரம் செய்வார்கள். நாம் பூக்களால் அலங்காரம் செய்யலாம்.

**சிவபக்தர்கள் அவசியம் சிவராத்திரி விரதம் இருக்க வேண்டும் என்று சைவ சமயத்தின் கோட் பாடாகும், இப்படி இருந் தால் ஈசனின் திருவடி நிழலில் இடம் கிடைக்கும்!**







www.aanmeegamalar.com



www.aanmeegamalar.com

# சிவபெருமானின் தோற்றமும் கற்க வேண்டிய விஷயமும்

சிவனின் படர்ந்த ஜடாமுடியிலிருந்து, ருத்ரதாண்டவம் ஆடும் அவரது காலடி வரை, நமது வாழ்வியல் குறித்தும், பண்பு நலன்கள் குறித்தும் பல விஷயங்கள் சூசகமாகக் கூறப்பட்டுள்ளது.

இயல்பாகவே மற்ற கடவுள்களுடன்ஒப்பிட்டு பார்க்கும் போது சிவபெருமான் மிகவும் எளிமையான தோற்றம் கொண்டவர்.

ஆனால், மிகவும் உடல்திறன் வலிமையாகவும், திடகாத்திரமாகவும் காட்சியளிக்கும் கடவுளாக திகழ்வார் சிவபெருமான்.

இதிலிருந்து, எளிமையாக இருப்பவர்களின் வாழ்க்கை தான் நல்ல உயர்வான, திடமான நிலைக்கு செல்லும் என நாம் தெரிந்துக்கொள்ளலாம்.

மக்கள் வீண் பகட்டை தவிர்ப்பது அவர்களுக்கு தான் நல்லது..

**ஜடாமுடி:** சிவபெருமானின் நேர்க்கொண்டு உயர்ந்து காணும் ஜடாமுடியின் மூலம், ஒருமுகமாக இருக் கும் உடல், மனம் மற்றும் ஆத்மா உங்களது உடல்நிலையையும், மனநிலையும் அதிகரிக்க செய்யும் மற்றும் உங்களை அமைதியான நிலை யில் ஆட்கொள்ள உதவும். உங்கள் செயல்களில் ஒருமுகத்தோடு செயல்பட பயன்தரும்.

**நெற்றிக்கண்:** சிவபெருமானின் நெற்றிக்கண் நமக்குகூறுவது என்னவெனில், நமக்கு பின்னால் இருக்கும் பிரச்சனைகளையும் எதிர்க்கொண்டு அதை தகர்த்தெறிந்து, முடியாது

என்பனவற்றையும் முடித்துக் காட்ட வேண்டும் என்பதே ஆகும்.

**திரிசூலம்:** திரிசூலம் மூலமாக நாம் அறிய வேண்டியது, நமது மனது, அறிவாற்றல், தன் முனைப்பு ஆகியவற்றை கட்டுப்படுத்தினோம் எனில் நமது வேலைகளில் சிறந்து செயல்பட இயலும் மற்றும் தோல்விகளைத் தகர்த்தெறியலாம் என்பனவாகும்.

**ஆழ்ந்தநிலை:** சிவபெருமானின் ஆழ்நிலை உருவின் மூலமாக, நாம் அமைதி மற்றும் பொறுமையைக் கையாளும் போது, நமது தினசரி பிரச்சனைகளையும், கவலைகளையும் எளிதாக கடந்து தெளிவான மனநிலை பெறலாம் என்பதே ஆகும்.

**சாம்பல்:** சிவபெருமானின் தேகத்தில்இருக்கும் சாம்பல் நமக்கு உணர்த்துவது, நம் வாழ்க்கையில் எதுவுமே நிரந்தரம் அல்ல, அனைத் தும் கடந்து போகும். அதனால் எதற்காகவும் மனக் கவலைப்படாமல், துயரம் கொள்ளாமல் உங்கள் தோல்விகளில் இருந்து மீண்டெழுந்து வாருங்கள் என்பதே ஆகும்.

**நீலகண்டம்:** சிவபெருமானின் நீல நிற தொண்டையின் மூலம் நாம் அறியவேண்டியது, நமக்கு எவ்வளவு கோபம் வந்தாலும், அதை கட்டுப்படுத்த கற்றுக் கொள்ள வேண்டும். தேவையில்லாமல் அதை மற்றவர் மீது திணித்து (விஷ சொற்களாக), உங்கள் நிலையை நீங்களே குறைத்துக் கொள்ள கூடாது, என்பதே ஆகும்.

**உடுக்கை:**

சிவபெருமானின் உடுக்கையின் மூலமாக, உங்கள் உடலின் அனைத்து எண்ணங்களையும் ஒருமுகமாக செயல்படுத்தும் போது, உங்கள் உடல் சுத்தமாகி, நோயின்றி வாழ உதவுகிறது என்பதே ஆகும்.

**கங்கை:**

சிவபெருமானின் தலையில் இருக்கும் கங்கை நமக்கு உணர்த்துவது, உங்களது அறி யாமையின் முடிவில் ஒரு தேடல் பிறக்கிறது. அந்த தேடலில் இருந்து தான் உங்களுக்கான புதிய வழி தென்படுகிறது என்பதே ஆகும்.

**கமண்டலம்:**

சிவபெருமானின் கமண்டலம் மூலம் நாம் அறிய வேண்டியது, நமது உடலில் இருந்து தீய எண்ணங்களையும், எதிர்மறை எண்ணங் களையும் தவிர்த்தோம் என்றால் நாம் நல்ல நிலையை எட்ட முடியும் என்பதே ஆகும்.

**நாகம்:**

சிவபெருமானின் கழுத்தை சுற்றி இருக்கும் நாகம் மூலமாக நாம் உணர வேண்டியது, நம்முள் இருக்கும் 'நான்' எனும் அகங்காரத்தை விட்டுவிட்டால், உங்கள் மனநிலையும் மற்றும் உடல்நிலையும் மேலோங்கும் என்பதே ஆகும்.


www.aanmeegamalar.com

எங்கள்
சேவைக்கு
உங்களின்
உதவிக்கரம்



# விருப்ப சந்தா



தொடர்ந்து வெளிவரும் நமது இதழுக்கு உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் **ரூ.10** முதல் தங்கள் வசதிக்கேற்ப விருப்ப சந்தா செலுத்தி எங்கள் பணிக்கு உதவலாம்.

**சந்தா அனுப்புபவர்கள், கீழ்காணும் ஸ்கேனர் மற்றும் வங்கி எண் வாயிலாக சந்தா செலுத்தலாம்**

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI
Paytm | BHIM Baroda Pay | BHIM | BharatPe

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**

# சோம்நாத் கோவிலில் மர்ம ரகசியம்




குஜராத்தின் பழமையான சோம்நாத் கோவிலில் "பான் ஸ்தம்பம்" (அம்புத் தூண்) என்று ஒரு கண்கவர் மர்மம் உள்ளது.

கோயிலின் தெற்குப் பகுதியில், கடலைக் காணும் வகையில், "பான் ஸ்தம்ப்" என்ற தூண் உள்ளது. கடல் நோக்கிச் செல்லும் தூணின் உச்சியில் ஒரு அம்பு கட்டப்பட்டுள்ளது. இந்த தூணின் இருப்பு 6 ஆம் நூற்றாண்டிலிருந்து சில பண்டைய புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தூணில் சமஸ்கிருதத்தில் ஒரு கல்வெட்டு செதுக்கப்பட்டுள்ளது (வட்டமிடப்பட்டுள்ளது).

“ஆசமுத்ராந்த தக்ஷிண த்ருவ், பர்யந்த் அபா தித் ஜோர்திமார்க்”

(கடலின் இந்த புள்ளியிலிருந்து தென் துருவம் வரை பூமியின் நிலப்பரப்பு இல்லை).

இப்போது வேடிக்கையான உண்மை. நீங்கள் சோம்நாத் மந்திரில் இருந்து தெற்கு நோக்கி பயணிக்கத் தொடங்கினால், தென் துருவத்தை (அண்டார்டிகா) அடையும் வரை நீங்கள் எந்த மலையையும் அல்லது நிலத்தையும் காண முடியாது.

தென் துருவத்தை நோக்கி அருகிலுள்ள நிலம் கிட்டத்தட்ட 10,000 கிமீ தொலைவில் உள்ளது.

அப்படியானால் மர்மம் என்னவென்றால் 6 ஆம் நூற்றாண்டில் நம் முன்னோர்களுக்கு இந்த உண்மை எப்படி தெரியும்?

இந்த குறிப்பு எதற்காக இவ்வளவு பெரிய தூணில் இப்படி குறிப்பு வைத்துள்ளனர் என்பது இன்றும் மர்மமாகவே உள்ளது.

பூமியின் வான்வழி வரைபடம் அவர்களிடம் இருந்ததா? வானியல், புவியியல், கணிதம் மற்றும் உண்மையில் கடல்சார் அறிவியல் ஆகியவற்றில் அவர்களுக்கு எவ்வளவு அறிவு இருந்திருக்க வேண்டும்!



நமது பண்டைய இந்திய பாரம் பரியம் உண்மையில் ஒரு அற்புதம்!




www.aanmeegamalar.com

# தேன் அபிஷேகம் செய்தால்

# சர்க்கரைநோயை போக்கும் ஈசன்

ஒருமுறை விருத்திராசுரன் தேவலோகத்தில் தன் கைவரிசையைக் காட்டினான். அந்த அசுர ஆக்கிரமிப்பைக் கண்டு இந்திரன் அதிர்ந்து போனான். சபையை கூட்டினான். ஆலோசனை கேட்டான். தேவர்களில் ஒருவர் யோசனை தெரிவித்தார்:

‘‘இந்திரரே, விருத்திராசுரன் இருளில்கூட நமது நிழலை கண்டுபிடிப்பான். ஒன்று அவனால் சிறைப்பட வேண்டும்; இல்லையேல் தப்பித்து ஓடியபடி இருக்க வேண்டும். இனி நாம் தேவர்களாக இருக்க வேண்டாம். ஒளியுடல் உதறுவோம். சூட்சும ரூபத்தை சுருக்கிக் கொள்வோம்.

நாம் தேனீக்களாக மாறி சீந்தராவணி நோக்கி செல்வோம். அங்குள்ள நந்தவனத்தில் உள்ள மலர்களில் உள்ள தேனை உறிஞ்சி ஈசனை பூஜிப்போம். காற்றில் மிதந்து வேதங்களையே ரீங்காரிப்போம்.

ஈசனின் அருளிருந்தால் அசுரனை வதம் செய்வோம். இல்லையெனில், நிரந்தரமாக தேனீக்களாகவே வாழ்வோம்.’’ என்றார்.

அனைவரும் அந்த யோசனையை அப்போதே ஏற்றார்கள். கண நேரத்தில் ஒளியுடல் சுருங்க, தேனீக்களாக மாறினார்கள்.

தேவலோக நகரமான அமராவதியின் வாயிலிலிருந்து பூலோகத்தை நோக்கி பிறைச்சந்திர வடிவில் வானில் ரீங்காரமிட்டபடி சீந்தராவணி நோக்கிப் பறந்தனர்.

லிங்க ரூபமாக வில்வ வனத்திற்கு மத்தியில் பேரரசனாக திகழ்ந்திருந்தார் ஈசன்.

பார்வை எட்டும் தொலைவு வரை அங்கே மலர்கள் பூத்துக் குலுங்கின. அதன் வாசம் விண்ணுலகுவரை வீசியது. பூக்களுக்குள் குமிழ் குமிழாய் தேன் பளிங்குபோல் ஒளிந்திருந்தது.

தேவ தேனீக்கள் வட்டமடித்து ஒவ்வொரு மலரின் இதழ் மீதும் அமர்ந்தன.

விஸ்தாரமான சோலைகளில் புஷ்பம் மலரும் வரை காத்திருந்து தேவ தேனீக்கள் தேன் சேகரித்தனர்.

தேவ தேனீக்கள் தேன் உறிஞ்சி அதன் சூடு குறையும் முன்பு வில்வ வனத்தினுள் உறைந்திருக்கும்




www.aanmeegamalar.com







www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com

ஆதிசிவனை நோக்கிப் பறந்தனர்.

உறிஞ்சிய தேனை அபிஷேகமாக ஈசனின் மீது சிந்தினர். ஈசனும் தேவ தேனீக்களின் வினோத பக்தி கண்டு வியந்தான். காலங்கள் உருண்டன. பெரிய தேனடைகள் தோன்றின. தைல தாரைபோல கண நேரம்கூட விடாது தேவதேனீக்கள் அபிஷேகத்தை தொடர்ந்தன.

தேவ தேனீக்களுக்கு இனியதொரு நாளில் ஈசன் காட்சி தந்தார். தன்னை அபிஷேகித்த தேனால் தான் பேரானந்தம் அடைந்ததை உணர்த்தினார்.

தேவர்கள் மீண்டும் தங்கள் பழைய உருவம் பெற்றனர். ‘மதுவனேஸ்வரா, மதுவனநாதா,’ என்று சிரசுக்கு மேல் கைக்கூப்பி வழிபட்டனர். வேத மந்திரங்களால் மதுவனத்தை நிறைத்தனர்.

நாளாவட்டத்தில் இங்கு தவமிருந்த தேவர்கள் நெஞ்சுரம் மிக்கவர்களாக மாறினர். தவத்தின் பயனாய் வரங்கள் குவிந்தன நெஞ்சில் வீரத்தோடும், பலமேறிய புஜத்தோடும் தேவர்கள் தெய்வத்தை துணை கொண்டு விருத்திராசுரனோடு போரிட்டதால் எளிதாக வெற்றி பெற்றனர்.

இவ்வாறு தேவர்கள் தேனிக்களாக மாறி பூஜை செய்த திருக்கோவில், தமிழகத்தின் திருவாரூர் மாவட்டத்தில் நன்னிலத்தில் உள்ள மதுவனேசுவரர் சமேத மதுவனேசுவரி திருக்கோவிலாகும்.

தேவ தேனீக்களால் நிவேதனமாக சமர்ப்பிக்கப்பட்ட, அமுதத்திற்கு நிகரான, மதுபர்க்கம் எனும் தேனால் ஈசனுக்கு அபிஷேகம் செய்யப்பட்டதால் இவருக்கு மதுவனேஸ்வரர் என்ற திருநாமம் ஏற்பட்டது.

தேனில் இனிப்பு தவிர வேறெந்த சுவையும் இருக்காது. எனவே காலம் காலமாக தேனால் அபிஷேகம் செய்ய பட்டு இனிப்பு சுவையினால்




www.aanmeegamalar.com

இங்குள்ள மதுவனேஸ்வரர் நிரம்பியுள்ளார்.

சர்க்கரை நோய் உள்ளவர்கள் இத்தலத்து இறைவனுக்கு தேனால் அபிஷேகம் செய்தால் சர்க்கரை நோய் குணமாகும் என்று கூறப் படுகிறது.

முள்ளை முள்ளால் எடுப்பது போல மதுவனேஸ்வரரை தேனால் அபிஷேகம் செய்து, மலர் மாலை சூட்டி வழிபட்டு அந்த அபிஷேக நீரை தினமும் சிறிது அருந்தி வந்தால் சக்கரை நோய் குணமாகும் என்பது இத்திருக்கோவிலின் தேவரகசியமாகும்.

நன்னிலம் என்று பெயர் வர காரணம்:

இத்தலத்திலேயே வாழ்ந்த ஸ்ரீதாண்டவராய சுவாமிகள், என்பவர் கைவல்ய நவநீதம் எனும் அத்வைத அனுபூதியைச் சொல்லும் பெரும் நூலை அருளினார். கைவல்யம் எனும் மாபெரும் நிலையை இந்த நிலத்தில் அமர்ந்து எல்லோருக்கும் அள்ளி அள்ளிக் கொடுத்தார்.

அப்பேர்பட்ட நிலையை துரீய நிலை என்பார்கள்.

அந்த துரீய நிலையை உரைத்த பூமியாதலால் நல்ல நிலம் என்றானது. இதையே நன்னிலம் என்று பிற்காலத்தில் அழைக்கத் தொடங்கினர்.

கோவில் சிறப்புகள்

- இங்குள்ள மது தீர்த்தத்தில் மாசி மாதம் நீராடி இறைவனை வழிபடுவோர் சகல நலன்களையும் பெறுவர் என்றும், ஏகாதசி மற்றும் பிரதோஷ காலத்தில்
- மதுவனேஸ்வரரை வழிபாடு செய்பவர்கள் மோட்சம் அடைவர் என்றும் கூறப்படுகிறது.
- இவருக்கு தேனால் அபிஷேகம் செய்து, மலர் மாலை சூட்டி வழிபட்டால் சிறப்பான மணவாழ்வு கிடைக்கும் என்று கூறப்படுகிறது.
- நன்னிலம் மதுவனேஸ்வரர் திருக்கோவில் கோச்செங்கட் சோழன் என்ற மன்னனால் கட்டப்பட்ட ஒரு மாடக் கோவிலாகும்.
- நால்வர் பெருமக்களுல் ஒருவரான சுந்தரர் தனது பதிகத்தில் இக்கோவிலை பெருங்கோயில் என்று அடைமொழி கொடுத்து சிறப்பித்துப் பாடியுள்ளார்.
- தனது பதிகத்தின் கடைசி பாடலில் இக்கோவில் கோச்செங்கட் சோழ னால் கட்டப்பட்டது என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.
- ஈசனின் சிருஷ்டிகளில் அவனை வழிபட ஈ, எறும்பு, தேனீ, பாம்பு என்று எல்லா ஜீவன் களுக்கும் உரிமையுண்டு என்று காட்டும் தலங்களில் இதுவும் ஒன்று
- முடிகொண்டான் ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள இத்திருக்கோவில் 270 அடி நீளமும், 135 அடி அகலமும் கொண்டது.
- மூலவர் மதுவனேஸ்வரர் எனும் திருநாமத்துடன்இருப்பதால் மயங்கவைக்கும் சகல கலைகளுக்கும் அதிபதியாக இவர் விளங்குகிறார்.
- இசையோ, ஓவியமோ, காவியமோ இயற்ற விரும்புவர்கள் இத்தல நாதரை கரைந் துருகி துதித்தால் போதும், கலை ஞானம் ஓடோடி வந்து அரவணைத்துக்






www.aanmeegamalar.com

கொள்ளும்.

❖ சூரியனின் அருகில் பைரவர் அருள்பாலிப்பதும், அனைத்து நவகிரகங்களும் சூரியனை பார்த்திருப்பதும், சூரியனும் குருவும் நேருக்கு நேர் பார்த்திருப்பதும், சனி பகவான் தனி சன்னதியில் அருள் பாலிப்பதும், சித்ர குப்தர் தனி சன்னதியில் அருள்பாலிப்பதும் தலத்தின் சிறப்பம்சமாகும்.

❖ தெற்கில் எமனும், மேற்கில் வருணனும், கிழக்கில் இந்திரனும், வடக்கில் குபேரனும் லிங்கம் அமைத்து பூஜை செய்துள்ளார்கள்.

❖ இந்திரன் முதலான தேவர்கள், சூரியன், பிருஹத்ராஜன் ஆகியோர் இத்தல இறைவனை வழிபட்டுள்ளனர்.

❖ பிருஹத்ராஜனின் கோரிக்கைக்கு இணங்கி, சிவபெருமான் ஆலயத்தின் வடக்கே தனது சூலாயுதத்தால் ஒரு குளத்தை உருவாக்கி, தன் தலையில் உள்ள கங்கையை அதில் நிரப்பினாராம். இது சூலதீர்த்தம், பிருஹத் தீர்த்தம், மது தீர்த்தம் என்று பல பெயர்களால் அழைக்கப்படுகிறது.

❖ ஜலந்திரன் என்ற அசுரனை எம்பெருமான் வதம் செய்தபோது வீசிய சக்கரம், இத்தலத்தினருகில் விழுந்ததாம். அங்கு உருவான தீர்த்தம் சக்கரக்குளம் என்று தற்போது அழைக்கப்படுகிறது. இது ஆலயத்தின் கிழக்கே சற்று தொலைவில் உள்ளது.




❖ நாராயண சுவாமிகள், தாண்டவராய சுவாமிகள் எனும் இரு மகான்களின் ஜீவ சமாதிகள் இத்திருத்தலத்தில் அமைந்துள்ளன.

# 1000 கண்களுடன் காட்சியளித்த சிவன்

## ஜாதிக்காயை கடுக்காயாக மாற்றிய கடுக்காய் விநாயகர்

திருவாரூர். திருத்துறைப்பூண்டி சாலை வழியில் திருவாரூரில் இருந்து தெற்கே சுமார் 13 கி.மி. தொலைவில், பிரதான சாலை ஓரத்தில் அமைந்துள்ளது, அருள்மிகு கைலாயநாயகி அம்மன் உடனுறை கண்ணாயிரநாதர் திருக்கோயில், இத்தலத்திற்கு அருகில் திருநெல்லிக்கா, திருகைச்சினம், திருக்கொள்ளிக்காடு ஆகிய பாடல் பெற்ற சிவஸ்தலங்களும் உள்ளன.

தேவாரப்பாடல் பெற்ற காவிரி தென்கரைத்தலங்களில் இது 119வது தலம்.

தேவாரப்பாடல் பெற்ற 274 சிவாலயங்களில் இது 183 வது தேவாரத்தலம் ஆகும்.

பிரம்மாவிற்கு சிவபெருமான், ஆயிரம் கண்களுடன் காட்சி தந்தார்

சப்த விடங்கத் தலம். திருக்காறாயில் மூர்த்தி,தீர்த்தம், தலம் ஆகியமூன்றாலும் சிறப்பு பெற்ற தலமாகும்.

தியாகராஜர் சந்நிதி முன்னுள்ள நந்தி நான்கு கால்களுடன் நின்று கொண்டிருக்கும் காட்சியைக் காணலாம்.

ஓரிடத்தில் நின்று நேரே சிவபெருமானையும் வலதுபுறம் அம்பாளையும் தரிசித்து மகிழத்தக்க அமைப்புடைய சந்நிதிகள். மூலவருக்கு முன்னால் பக்கத்தில் நடராஜசபை உள்ளது.

வழிபட்டோர்: பிரம்மா, பதஞ்சலி முனிவர், முசுகுந்த சக்கரவர்த்தி, சம்பந்தர், சேக்கிழார், இந்திரன்

திருஞானசம்பந்தர் இத்தலத்து இறைவன் மேல் பாடியருளியுள்ள இப்பதிகம், இரண்டாம் திருமுறையில் இடம்பெற்றுள்ளது. இப்பதிகத்தை உள்ளன்போடு பாடி வருபவர்களின் வினைகள் யாவும் நீங்கிவிடும் என்று சம்பந்தர்தனது பதிகத்தின் பல பாடல்களில் தெரிவிக்கறார்.



திருஞானசம்பந்தர் தேவாரம்

நீரானே நீள்சடை மேலொர் நிரைகொன்றைத்
தாரானே தாமரை மேலயன் தான்றொழுஞ்
சீரானே சீர் திகழும் திருக்காறாயில்
ஊரானே யென்பவர் ஊனமி லாதாரே.

தல வரலாறு

கார் அகில் மரக்காடு நிறைந்து இத்தலம் இருந்ததால் காறாயில் என்று பெயர் பெற்றது. பிரம்மாவிற்கு ஒருமுறை தான் எல்லோரையும் விட பெரியவன் என்ற கர்வம் வந்தது. அதனால் சிவபெருமானைக்கூட வழிபடாமல் அவரை அலட்சியம் செய்தார். சிவபெருமான் அவரது அகத்தையை அகற்றிட திருவுளம் கொண்டு அவரது படைக்கும் தொழில் பதவியை அவரிடமிருந்து பறித்து விட்டார். பதவி பறிபோன பிரம்மா கர்வம் அடங்கி பின்னர் விஷ்ணுவின் உபதேசத்தால் காரை மரங்கள் நிறைந்திருந்த திருக்காராயில் (திருக்காரவாசல்) வந்து இறைவனை நினைத்து ஆயிரம் ஆண்டுகள் தவம் செய்தார்.

சிவபெருமான், ஆயிரம் கண்களுடன் அவருக்குக் காட்சி தந்தார். கண்ணாயிரநாதர் என்று பெயர் பெற்றார். கருவறையில் கண்ணாயிரநாதர் சுயம்பு லிங்க உருவில் கிழக்கு நோக்கி நமக்கு அருட்காடசி தருகிறார். கண்ணாயிரநாதருக்குச் சமமாக, பக்கத்திலேயே ஆதிவிடங்க தியாகராஜரின் சன்னதி அமைந்திருக்கிறது.

தியாகராஜர் சந்நிதி முன்னுள்ள நந்தி நான்கு கால்களுடன் நின்று கொண்டிருக்கும் காட்சியைக் காணலாம். கிழக்கு நோக்கிய இக்கோவிலுக்கு ராஜகோபுரமில்லை. முதல வாயிலைக் கடந்து உள் சென்றவுடன் கவசமிட்ட கொடிமரம், பலிபீடம், சற்று உயரத்தில் உள்ள நந்தி ஆகியவற்றைக் காணலாம். இரண்டாவது நுழைவாயிலில் மூன்று நிலைகளையுடைய கோபுரம் உள்ளது. கோபுர வாயிலைத் தாண்டி உட்சென்று வலமாக வரும்போது, சுந்தரர், (உற்சவர்) சந்நிதி, தியாகராஜசபை, விநாயகர், பல சிவலிங்கத் திருமேனிகள், மகாவிஷ்ணு, ஆறுமுக சுவாமி, சரஸ்வதி, கஜலட்சுமி, பைரவர் முதலான சந்நிதிகள் உள்ளன.

இத்தலத்தில் இறைவியாரது திருப்பெயர். கைலாசநாயகி. நின்ற கோலத்தில் ஒரு கையில் அக்கமாலையுடனும், மற்றதில் தாமரையுடனும் தெற்கு நோக்கி தரிசனம் தருகிறாள். ஓரிடத்தில் நின்று நேரே சிவபெருமானையும் வலதுபுறம் அம்பாளையும் தரிசித்து மகிழத்தக்க அமைப்புடைய சந்நிதிகள். மூலவருக்கு முன்னால் பக்கத்தில் நடராஜசபை உள்ளது.

உற்சவத் திருமேனிகளுள் காட்சி தந்த நாயனார் திருமேனி தரிசிக்கத்தக்கது. இவர் பின்னால் நந்தியுடனும், அருகில் உமையும் கூடியவாறு காட்சி தருகிறார். மகாவிஷ்ணு, பிட்சாடனர், அகஸ்தீஸ்வரர், கைலாசமேஸ்வரர், இந்திரபுரீஸ்வரர், விஸ்வநாதர், எல்லையம்மன், சுப்ரமண்யர், கஜலட்சுமி, நாகர், சரஸ்வதி, துர்க்கை, பைரவர், நால்வர் ஆகியோரும் இந்த ஆலயத்தில் தரிசனம் தருகிறார்கள்.

இத்தலத்தின் மற்றொரு சிறப்பு இங்குள்ள மூன்று பைரவர்கள் சந்நிதியாகும். காலை, மதியம், இரவு என்று மூன்று காலங்களிலும் வணங்க வேண்டிய மூன்று பைரவர்கள் அருகருகே இங்கே தரிசனம் செய்வதைக் காணலாம். இவர்கள் முறையே காலை பைரவர், உச்சிகால பைரவர் மற்றும் சொர்ணாகர்ஷண பைரவர் என்று அழைக்கப்படுகின்றனர். இத்தலத்தில் அருள்பாலிக்கும் சொர்ணாகர்ஷண கால பைரவரை வழிபாடு செய்தால் இழந்த பொருள்களை மீண்டும் பெறலாம் என்பது ஐதீகம்.

சப்த விடங்கத் தலம்:

"விடங்கம்' என்றால் "சிற்பியின் உளி இல்லாமல்' என்று பொருள். "சிற்றுளி கொண்டு செதுக்கப்படாமல்' தானே உருவான இயற்கை வடிவங்களை"சுயம்பு' அல்லது "விடங் கம்' என்று குறிப்பிடுவார்கள். அப்படி உளி இல்லாமல் உருவான 7 லிங்கங்கள் சப்தவிடத்தலங்கள் எனப் பட்டன.





சிவத்திரு.குமரேசன்

முசுகுந்த சக்கரவர்த்தி தேவேந்திரனிடம் இருந்து பெற்றுக் கொண்டு வந்த தியாகேசர் திருமேனிகள் ஏழில் ஒன்றை எழுந்தருளுவித்த சப்த விடங்கத் தலங்களுள் திருக்காறாயில் ஒன்றாகும். இத்தலத்து தியாகராஜர் ஆதிவிடங்கர் எனப்படுகிறார். இந்த திருக்காரவாசலில் தியாகராஜர் வீர சிங்காதனத்தில் குக்குட நடனக் காட்சியுடன் அருள்புரிகிறார். திருவாரூரில் வீதிவிடங்க தியாகேசரின் அஜபா நடனத்தைக் கண்டுகளித்த பதஞ்சலி முனிவர், எல்லா வகை நடனங்களையும் தனக்குக் காட்டியருள வேண்டுமென்று இறைவனிடம் வேண்டினார்.

திருக்காராயில் வந்தால் காணலாம் என்று தியாகராஜர் கூறி, அதன்படி பதஞ்சலி முனிவருக்கு 7 வகை தாண்டவங்களை ஆடிக் காட்டிய தலம்தான் இந்த திருக்காரவாசல். தியாகேசருக்கு நேர் எதிரில் சுந்தரர் சந்நிதி அமைந்துள்ளது. இத்தலத்தில் இரண்டு தீர்த்தங்கள் உள்ளன.

ஒன்று ஆலயத்தின் வடக்குப் பிரகாரத்தில் உள்ள சேஷ தீர்த்தம் என்ற கிணறு. ஆதிசேஷன் இந்த கிணற்றின் வழியாக கோயிலுக்குள் சென்று இறைவனை வழிபட்டதால், சேஷ தீர்த்தம் என்று பெயர் ஏற்பட்டது. இது இந்திர தீர்த்தம் என்றும் அழைக்கப்படுகிறது. சேஷ தீர்த்தம் என்னும் கிணற்று நீர், மருத்துவ குணம் மிக்கது. ஒவ்வொரு பௌர்ணமியன்றும் அம்பிகைக்கு அந்த நீர் அபிஷேகம் செய்யப்பட்டு, வேண்டுவோர்க்கு அளிக்கப்படுகிறது.

ஒவ்வொரு பௌர்ணமியிலும் இந்த சேஷ தீர்த்தத்து நீரைப் பருகி வந்தால் தீராத நோய்களும் நீங்கும் என்று சொல்லப்படுகிறது. புரட்டாசி மாதம் பௌர்ணமி நாளில் இந்திரன் சேஷ தீர்த்தத்தில் நீராடி இத்தலத்து விநாயகர் கடுக்காய் பிள்ளையாரை பூஜிப்பதாக ஐதீகம்.

இன்னொரு தீர்த்தம், பிரம்ம தீர்த்தம் என்னும் திருக்குளம். இது கோவிலுக்கு வெளியே உள்ளது. இத்தலத்து விநாயகர் கடுக்காய் பிள்ளையார் என்று பெயர் பெற ஒரு தலபுராண வரலாறு உண்டு. வணிகன் ஒருவன் இத்தலத்து வழியே வர்த்தக நிமித்தமாக வரும் போது இங்குள்ள சேஷ தீர்த்தக்கரையில் இளைப்பாறினான். அவனுடன் வந்த வண்டியில் ஜாதிக்காய் மூட்டைகள் இருந்தன. அவனிடம் திருவிளையாடல் புரிய நினைத்து விநாயகர் ஒரு சிறுவனாக வணிகன் முன்வந்து மூட்டைகளில் என்ன இருக்கிறது என்று கேட்டார். வணிகன் வேண்டுமென்றே கடுக்காய் இருக்கிறது என்று பதில் கூறினான்.

விநாயகர் புன்னகை புரிந்தார். வணிகன் தான் சேர வேண்டிய இடம் வந்ததும் மூட்டைகளைப் பிரித்துப் பார்க்க அவைகளில் கடுக்காய் இருக்கக் கண்டு திடுக்கிட்டான். ஏதோ தெய்வ குற்றம் செய்து விட்டோம் என்று உணர்ந்த அவன் இறைவனிடம் முறையிட்டு பிழை பொறுத்தருள வேண்டினான். விநாயகப் பெருமான் அவன் முன் காட்சி கொடுத்து கடுக்காயை ஜாதிக் காய்களாக மாற்றி அருள் புரிந்தார். அது முதல் இத்தலத்து விநாயகர் கடுக்காய் பிள்ளையார் என்ற பெயருடன் இத்தலத்தில் பக்தர்களுக்கு அருள் புரிந்து வருகிறார். இவர் சந்நிதி பிரம்ம தீர்த்தக்கரையில் உள்ளது.

– சிவத்திரு.குமரேசன்
இராஜசிம்மன்
உதவிப் பேராசிரியர் SRM கலை
மற்றும் அறிவியல் கல்லூரி
போன்: 919003296221
easanaithedi.in



www.aanmeegamalar.com

ராமனுக்கு உதவிய அணிலைப் போன்று
ஆன்மிகத்திற்கு எங்கள் சேவை மிகச் சிறியது

# எங்கள் சேவைக்கு உங்கள் உதவி தேவை

ஆன்மிகமலர் டிரஸ்ட் வாயிலாக
ஆன்மிகமலர்.காம், ஆன்மிகமலர் மொபைல்-ஆப்,
இ-புத்தகம் ஆகியவற்றை எந்தவித கட்டணமுமின்றி
அனைவரும் படிக்கும் வகையில் இலவசமாக
வெளியிட்டு வருகிறோம்.

## இதுவரை 130 இதழ்களை கடந்துள்ளோம்.

இன்னும் எங்கள் சேவையை விரிவுபடுத்த
பொருளாதார உதவி தேவைப்படுகிறது.
உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட
வங்கி கணக்கின் மூலம் உதவலாம்.



**ஆன்மிகமலர் டிரஸ்ட்**
Tamilnadu Government Redg.304/2016

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)

மேலும் விவரங்களுக்கு 09444228203
எண்ணில் தொடர்பு கொள்ளவும்

# வழிபாடு என்பதே சிவலிங்கத்தில் இருந்து தான் துவங்கியது

# சக்தி தத்துவத்தை உணர்த்தும் சாக்த மதம்


www.aanmeegamalar.com

## கடவுள் உருவாக்கிய மதம்

அம்மா இந்த மூன்று எழுத்தில் எத்தனை சுகம், எத்தனை இதம், எவ்வளவு பாதுகாப்பு நடந்து போகும் காலில் சின்ன சிறு கல் பட்டாலும் நம்மையும் அறியாமல் அம்மா என்று தானே கத்துகிறோம். எனக்கொரு வலி என்றால் என்னால் தாங்க முடியாத துயரம் வருகிறது என்றால் அதை உண்மையாகவே என்னிடம் இருந்து விரட்டுவதற்கு பாடுபடும் ஒரே ஜீவன் அம்மா தானே, இந்த உலகில் ஒரு ஜீவனாக பிறந்து கண் விழித்ததும் பார்த்தது அவள் முகம் தானே, அவள் இல்லையென்றால் நான் ஏது? திறமைகள் ஏது? எனக்கு வளர்ச்சி தான் ஏது? அம்மா விடம் எனக்கு பயமில்லை, அம்மாவிடம் எனக்கு வெட்கமில்லை, நான் வயது முதிர்ந்து கிழவனாகி விட்டாலும் நாடி நரம் பெல்லாம் ஒடி ஒய்ந்து தளர்ந்து போய்விட்டாலும் அவளை காணும் போது நான் குழந்தையாகி விடுகிறேன்.

கடவுளின் அருளில் கூட கலப்படம் இருக்கலாம், அழகான ரோஜா மலர் கூட நறுமணத்தை தராமால் இருக்கலாம். ஆனால் அம்மாவின் அன்பில் கலப்படம் இருக்காது. எப்போதுமே மாறுதல் இருக்காது. நான் என் தாயின் மீது அன்பு வைக்கலாம், வைக்காமல் கூட இருக்கலாம், வைப்பது போல் பாசாங்கு கூட செய்யலாம். ஆனால் அதை பொருட்படுத்தாமல் நான் நிஜமா? பொய்யா? என்று ஆய்வு செய்யாமல் என் மீது பரிபூரணமான அன்பை செலுத்துவது அம்மா தான். அம்மா மட்டும் தான்.

அதனால் தான் உலகத்தை ஆண்ட தமிழ் குடிமக்கள் பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு என்றார்கள். கெட்ட பிள்ளைகள் இருக்கலாம், கெட்ட தாய் என்று உலகத்தில் ஒருத்தி கூட இல்லையென்று தேவி பாகவதம் சொல்கிறது. பிறக்கின்ற போதே அம்மாவின் உடம்பில், அம்மாவின் உயிரில் அம்மாவின் குருதியில் ஒட்டிக்கொள்கிறோம். அதனால் தான் அறுசுவை பதார்த்தம் கூட அவள் ஊட்டும் ஒரு பிடி சாதத்தின் முன் சுவையை தர முடியாமல் மண்டியிடுகிறது.

வளர்ந்து விட்டோம், ஆயிரம்

பொறுப்புகளை சுமக்க முடியாமல் சுமந்து தள்ளாடுகிறோம். செல்வமும், செல்வாக்கும் நம்மை சூழ்ந்து இருக்கிறது. ஆனாலும் மனம் எங்கும் துயர அரக்கனே சிம்மாசனம் போட்டு அமர்ந்து இருக்கிறான், ஆட்சி செய்கிறான். இவனின் கோர பிடியிலிருந்து ஒரு விநாடியேனும் விடுபடமாட்டோமா என நெஞ்சம் பறக்கிறது, படபடக்கிறது. பிள்ளை பிராயத்தில் மரக்கிளையில் ஊஞ்சல் கட்டி ஆடியதையும், மணல் வீடு கட்டி விளையாடியதையும் நினைத்து நினைத்து உருகுகிறோம்.

அப்போது மட்டும் நம்மிடம் இன்பம் மட்டுமே குடி கொண்டு இருந்ததற்கு என்ன காரணம்? யார் பொறுப்பு? என் உடம்பு அழுக்கானால் அம்மா குளிப்பாட்டுவாள், எனக்கு நோய் வந்தால் அம்மா மருந்து தருவாள், எனக்கு பசி பிறக்கும் முன்பே சாதத்தை ஊட்டி என்னை போஸிப்பாள், என்று எல்லா பொறுப்புகளையும் அம்மா விடம் விட்டுவிட்டு நாம் சும்மா இருந்தோம். அதனால் சுகமாக இருந்தோம். எப்போது என்னை நான் பார்த்து கொள்வேன் என செயல்பட துவங்கினோமோ அப்போதே துயரம் என்ற காரிருள் நம்மை சூழ ஆரம்பித்துவிட்டது.

அம்மா தான் எல்லாம் என்ற ஞானம் மனிதனுக்கு புதியதாக வந்ததல்ல, பச்சை மாமிசத்தை தின்று இலை தழைகளால் உடல் மறைத்து மரக் கொம்பிலும், குகைக்குள்ளும் மனிதன் வாழ்ந்த போதே இதை உணர்ந்துவிட்டான். இதனால்தான் தாயாரை தெய்வமாக கருத வேண்டும் என்ற நிலையில் இருந்து தெய்வத்தையே தாயாக எண்ணி வழிபட ஆரம்பித்துவிட்டான். அன்று முதல் தோன்றியது தான் தாய் தெய்வ வழிபாடாகும்.

நோக்கும் இடமெல்லாம் நீக்கமற நினைந்திருக்கும் பராமாத்மாவை பரம தாயாளனான இறைவனை தாயாக ஒரு பெண்ணாக பார்ப்பது மனிதனின் கற்பனையல்ல. எல்லாமான எம்பெருமானுக்குள் எல்லாமும் இருக்கிறது. ஒரு தாயினுடைய அன்பில் மூலம் எங்கே இருந்து வருகிறது. எந்த விரலை தொட்டாலும் அறிய முடியாத பாசத்தை உணர்கிறோமே அந்த கருணை, அந்த பாசம் எங்கே இருந்து வருகிறது எது அதனின் மூலம் என்று நெருங்கி பார்த்தால் கருணாமூர்த்தியான கடவுளிடம் இருந்து வருவதை உணர முடிகிறது.

அதனால் தான் இறைவனுக்குள்ளும் இறைவி இருக்கிறாள் என நமது முன்னோர்கள் சொன்னார்கள். தாயிற் சிறந்த தயாவான தத்தவனே என மாணிக்கவாசகர் சொல்வதும், அப்பன் நீ, அம்மை நீ என்று அப்பர் சாமிகள் சொல்வதும் இதனால் தான். ஓங்கி உலகளந்து நிற்கின்ற பராமாத்மா நமது உடலையும் உயிரையும் வளர்கின்ற அம்மாவாகின்றான். அறிவை வளர்த்து ஆத்ம அனுபவத்தை தருகின்ற அம்மாவும் அவன் தான். மனித தாய் வயிற்று பசிக்கு பால் தருவது போல தெய்வ தாயான கடவுள் நம் ஞான பசிக்கு மோன வழியில் ஞான பால் தருகிறான். இப்படி இன்னும் ஏராளமான காரணங்களை தனக்குள் கொண்டு வளர்ந்து தான் சக்தி தத்துவம் என்ற சாக்த்த மத பிரிவாகும்.



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

இந்து மத வரலாற்றை தொடர்ச்சியாக படித்து வரும் நாம் முதலில் வழிபாடு என்பதே சிவலிங்கத்தில் இருந்து தான் துவங்கியது என கண்டோம். சிவ வழிபாடு என்பது எப்படி காலத்தால் கணித்து கூறமுடியாத அனாதிகாலம் தொட்டு நடைமுறையில் இருந்து வருகிறதோ அதே போலவே சக்தி வழிபாடு என்பதும் காலம் காலமாக இருந்து வருகிறது. இந்து சமயத்திலுள்ள வைஷ்ணவம், சௌரம், கௌமாரம், காணாபத்தியம் போன்ற பிரிவுகள் எல்லாம் சிவ சக்தி வழிபாட்டுக்கு பிறகே வந்தது என்று சொல்வதில் எந்த தவறும் இருப்பதாக நான் நினைக்கவில்லை. எனவே அடுத்து வரும் சில பகுதிகளில் தாய் தெய்வ வழிபாடு என்ற சக்தி வழிபாட்டின் தத்துவத்தையும் மகத்துவத்தையும் சிறிது பார்ப்போம்.

தாய் தெய்வ வழிபாட்டில் என்ன மகத்துவம் இருக்கப்போகிறது ஊர்தோரும் இருக்கும் அம்மன் கோயில்களில் ஆடி மாதத்தில் நெருப்பு மிதித்து சாக்கை ஊற்றுவது தான் அதன் மகத்துவமாக இருக்கலாம் என்று சிலர் கேலி பேசுவதும் உண்டு அலகுகுத்தி, ஆடு, கோழிகளை வெட்டி கொண்டாடும் வழிபாட்டில் தத்துவம் இருப்பது அதிசயம் அல்ல விநோதம் என்றும் சிலர் பேசலாம். இவைகள் வெறும் கேலி மொழியாகவோ விதண்டாவாதமாகவோ நாம் எடுத்து கொள்ளலாம் அப்படி எடுத்து கொண்டால் அது சரியானதாக கூட தோன்றும் ஆனால் உண்மை நிலையை அது பிரதிபலிப்பதாக இருக்காது.

நமது இந்தியாவில் காஷ்மீர் துவங்கி

கன்னியாகுமரி வரை நடைபெற்றுவரும் உயிர்பலி சடங்குகளில் பல அன்னை வழிபாட்டின் பெயரிலேயே நடக் கிறது எனலாம்.




அழகான மண்பானடங்களை செய்து வைத்த குயவனின் முன் னாலேயே அந்த பாண்டங்களை அடித்து உடைப்பது எப்படி மனிதாபி மானம் இல்லாத செயலோ அப்படியே எல்லா உயிர்களுக்கும் தாயாக இருக்கின்ற அன்னை அகிலாண்டேஷ்வரி முன்னால் உயிர்பலி செய்வதும் ஆகும்.

எனவே தாய் தெய்வ வழிபாட்டில் உயிர்பலிகளும், கண்முடிதனமான பழக்கவழக்கங்களும் நிறைந்திருப்பதாகவே மேலோட்டமாக பார்க்கும் போது நமக்கு தோன்றும் இது மட்டுமல்ல தனது குழந்தையின் இரத்தத்தை விரும்பி சுவைப்பவள் தாயாக இருக்க முடியுமா அப்படி பட்டவளை உலக அன்னையாக வழிபடுவது சரிதானா என்ற எண்ணம் எழும்பினாலும் ஆச்சிரியப்படுவதற்கு இல்லை.

ஆதிகால மனிதன் வேட்டையாடி உயிர் கொலை செய்து தான் வாழ்கையை நடத்தினான். அப்படி வாழ்ந்த போது தனக்கு எது பிரியமாணதோ, தனக்கு எது சுவையுடையதாக தெரிகிறதோ அதையே தான் வணங்கும் தெய்வத்திற்கு சமர்பித்தான் தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை என்று பெரியவர்கள் சொல்வார்கள். அதே போல தான் ஆரம்பகால பழக்கத்தை கைவிட்டுவிட துணிச்சல் இல்லாமல் இன்று வரை பலியிட்டு வழிபடுவதை கடைபிடித்து வருகிறான் இதை நிறுத்திவிட்டால் தீங்கு ஏதாவது நடைபெற்று விடுமோ என்று அச்சப்படவும் செய்கிறான்

மேலும் பலிகொடுத்து வழிபடுவது என்பது இந்துக்களுக்கு மட்டும் சொந்தமான நடைமுறை அல்ல, யூத மதத்திலும், இஸ்லாம் மதத்திலும் கூட இத்தகைய வழிபாட்டு முறை இருந்து வருகிறது.

ஆனால் நமக்கு அம்மன் கோயில் திருவிழாவில் ஆடு, கோழி பலியிடுவதுதான் காட்டுமிராண்டிதனமாக தெரிகிறதே தவிர \மொஹரம் பண்டிகையில் உயிர்பலி கொடுப்பது தவறுதலாக படவில்லை காரணம் உலகிலேயே இந்து மதத்தார் மட்டும் தான் தன்னைதானே இழிவுபடுத்தி கொள்ளும் ஜாதிகளாக இருக்கிறார்கள். அடுத்தவர்களின் குறை நிறையாக மட்டுமல்ல மேன்மை தங்கியதாகவும் நமக்கு படுகிறது.

முதலில் இந்த நிலையை நாம் மாற்றவேண்டும். வளர்ந்து விட்ட நாகரிக சமூகத்தில் கூட மிக தொன்மை வாய்ந்த பழக்கவழக்கங்கள் அவ்வளவு சீக்கிரம் மாறாது இதனால் பல நன்மைகளுக்கும் சாதத்தில் கல் இருப்பது போல சில தீமைகளும் இருக்கலாம் அதனால் அந்த தீமைகளை படிப்படியாக தான் குறைக்க வேண்டுமே தவிர ஒட்டுமொத்தமாக ஒழித்துகட்டிவிட முடியாது. உலகத்தில் உள்ள எல்லா ஜீவன்களுமே அன்னை பராசக்தியின் குழந்தைகள் தான் என்ற எண்ணம் எல்லோருக்கும் வரும் போது உயிர்பலி சடங்கு தானாக முடிந்துவிடும்.

அடுததாக தீ மிதித்தல் அலகுகுத்துதல் போன்ற முரட்டுதனமான வழிபாட்டு முறையை விமர்சனம் செய்பவர்கள் இது தான் அம்மன்

ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்




வழிபாடு தந்த கொடை என்கிறார்கள். அவர்கள் ஒரு விசயத்தை மிக நன்றாக உணர வேண்டும். நெருப்பை வளர்த்து அதை தனிய விட்டு அதனுள் இறங்கி மற்றவர்களை நடக்க வைத்து நான் மட்டும் அழகுபார்த்தேன் என்றால் அது தவறு மட்டும்மல்ல மனிதாபிமானமற்ற செயலாகும்.

ஆனால் இங்கு அப்படி எதுவும் நடக்கவில்லை நான்தான் வெறும்காலுடன் நெருப்பு குண்டத்தில் இறங்குகிறேன். அதன் சூடும், வெப்பமும் என்னை மட்டும் தான் தாக்குகிறது. அலகு குத்துவதும், அருவாள் மேல் நடப்பதும் ஏறகுறைய அப்படிதான் எந்த வகையிலாவது மனதை ஒருநிலைப்படுத்தி கடவுளின் மீது லயிக்க வேண்டுமென்று இந்து மதம் சொல்கிறது. நான் முரடன், மிக கடினமான உடல் வேலைகளை செய்து பழக்கப்பட்டவன் எனக்கு எதுவும் சுலபமாக, சுகமாக இருந்தால் மனம் ஒட்டாது வியர்வை வழிய கண்கள் ஏறிய பாடுபட்டால் தான் மனம் ஒட்டும் அதனால் தான் இந்த இராட்ச்சஷ வழிபாடு இதனால் யாருக்கும் தீங்குயில்லையே அதனால் இதில் தவறு இல்லை.

இந்து மதத்தில் மட்டும் தான் இத்தகைய முரட்டு வழிப்பாட்டு முறை இருப்பதாக யாரும் கூற இயலாது கல்வாரி மலைக்கு சிலுவையில் அரைவதற்காக இயேசு நாதர் அழைத்து செல்லப்பட்ட பாதையில் இன்றும் ஏராளமான பக்தர்கள் தோழில் சிலுவையும் தலையில் முட்கீரிடமும் தாங்கி நடக்கிறார்கள். சாட்டையால் கூட அடிவாங்கி கொள்கிறார்கள், ஈராக் போன்ற மத்திய கிழக்கு நாட்டு முஸ்லிம்கள் தங்கள் உடம்பில் காயம் ஏற்படும் அளவிற்கு கத்தியாலும் சங்கிலியாலும் அடித்து கொள்கிறார்கள். எனவே முரட்டு வழிபாடு என்பது உலகில் சகஜம் தான் என்பதை உணர்ந்து சக்தி வழிபாட்டின் மகத்துவத்தை உணர பயணத்தை தொடர்வோம்..

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும் **போன்: 09442426434**

ஆன்மிகமலர்

**ஆன்மிக விஷயங்களின் முழு வீடியோ**
aanmeegamalar
YouTube
**யூ-டியூப் சேனலில் பதிவிடப்பட்டுள்ளோம். நமது சேனலில் சென்று முழுவதுமாக பார்த்து பயன் பெறுங்கள்...**

ஆன்மிக சேவை செய்யும் நமது சேனலை
Subscribe
like & share

# இறந்தபின் முக்தியடையவைக்கு
# ஸ்ரீஅபிமூக்தீஸ்வரர்

திருக்கழுக்குன்றத்திலிலருந்து செங்கல்பட்டு செல்லும் சாலையில் உள்ள நென்மேலி கிராமத்தில் அமைந்துள்ளது ஸ்ரீதீரிபுரசுந்தரி உடனுரை ஸ்ரீஅபிமூக்தீஸ்வரர் ஆலயம்.




www.aanmeegamalar.com

கல்வெட்டு தகவல்:

திருக்கழுக்குன்றம் வட்டத் தில் சிற்றூராக நென்மேலி என் கின்ற ஊர் அமைந்துள்ளது. விக்கிரம சோழனுடைய ஆட்சியில் இந்த ஊர் கி.பி. 1126 நென்மேலி எனவும் மூன்றாம் மாறவர்மன் விக்கிரம பாண்டியனுடைய எட்டாவது ஆட்சி யாண்டில் கி.பி.1313 நென்மேலி புண்டரீக நல்லூர் எனவும் அழைக் கப்பட்டுள்ளது.

களத்தூர் தமிழதரையனான உத்தமன் திருச்சிற்றம்பலமுடையான இந்த கோயிலை சுற்றி மடைவளாகம் அமைக்கவும் கோயில் பூஜைக்கும் வரி நீக்கி நிலமலித்துள்ளான். சில பிராமணர்கள் புண்டரீக நாயனர் சிற்பத்தை வைத்து வழிபாடு செய்துள்ளனர்.

இறைவன் அபிமூக்தீஸ்வரர் என்பதனையும் மேற்கொண்ட தகவல்களையும் இக்கோயிலில் உள்ள இரண்டு கல்வெட்டுகள் மூலம் அறியலாம்.

திருக்கழுக்குன்றம் செங்கல்பட்டு பிரதான சாலையில் இருந்து 600 மீட்டர் தொலைவில கோயில அமைந்துள்ளது. கோயிலினை சுற்றி குடியிருப்புகள், வயல்வெளிகள், ஏரி என அமைந்துள்ளது. கோயிலினை சுற்றி புதியதாக வெளிச்சுவர் கட்டியுள்ளார்கள்.

கோயில் அமைப்பு:

சுற்றி மதில் சுவர்; அமைத்து நடுவில் கோயில் அமைந்துள்ளது. பாழடைந்த சிவாலயத்தினை புணரமைத்து கடந்த 21.11.2021 ஞாயிற்றுகிழமை அன்று கும்பாபிஷேகம் செய்துள்ளார்கள் கிழக்கு பார்த்தவாறு இறைவன் காட்சியளிக்கின்றார்.

இறைவன் பெயர் ஸ்ரீஅபிமூக்தீஸ்வரர், சிறிய கருவரையில் பெரிய ஆவுடையுடன் இறைவன் நமக்கு காட்சியளிக்கின்றார்; தெற்குபக்கம் பார்த்தவாறு ஸ்ரீதிரிபு ரசுந்தரி அம்மன் நமக்கு


www.aanmeegamalar.com

காட்சியளிக்கின்றார். நான்கடி உயரத்தில் அம்மன் சிலை அமைந்துள்ளது.

கருவரை சதுரவடிவிலும் விமானம் வட்ட வடிவிலும் அமைந்துள்ளது. ஆலயத்திற்கு எதிரில் கிணறு அமைந்துள்ளது. ஆலயம் சுற்றி வருகையில் கருவரை சுவற்றில் வரசித்தி வினாயகர். தட்சணாமூர்த்தி. ஸ்ரீ மகா விஷ்ணு, ஸ்ரீபிரம்மா, ஸ்ரீ சிவ துர்கை, சிலைகள் அமைந்துள்ளது.



வேலன்

சண்டிகேஸ்வரர் கோயில் தனியே உள்ளது. வெளிப்பிரகாரத்தில் ஸ்ரீகற்பக வினாயகர்ஆலயம் தனியே அமைந்துள்ளது.

கோயிலுக்குதனியே தேர் செய்துள்ளார்கள். விரைவில் வெள்ளோட்டம் விடுவதாக சொல்லியுள்ளார்கள். தலவிருட்ஷம் வில்வமரம்.

பௌர்ணமி, பிரதோஷம், மாத சிவராத்திரி, சதுர்த்தி மற்றும் மகா சிவராத்திரி இங்கு விஷேஷமாக கொண்டாடப்படுகின்றது.

இந்த ஊரிலேயே பெருமாள் கோயில் ஒன்று அமைந்துள்ளது. முன்னோர்களுக்கு திதி கொடுக்க மறந்தவர்கள் இங்கு வந்து திதி கொடுக்கின்றார்கள்.

பெருமாளை சேவித்து விட்டு இங்கு வந்து ஈசனை வழிபட்டால் இறந்தவர்களுக்கு முக்தி கிடைக் கும் என சொல்கின்றார்கள். கோயிலினை சுற்றி நந்தவனம்அமைத்து வருகின்றார்கள்.

கோயிலுக்கு எதிரில் நந்தி மண்டபமும் பலி பீடமும் அமைந்துள்ளது. இறந்தபின் முக்தியடையவிரும்புபவர்கள் இங்கு வந்து இறைவனை தரிசித்து செல்லலாம். ஆலய தொடர்புக்கு: நாகுஜய்யர்: 8870834446

– வேலன், போன்: 9894836096
திருக்கழுக்குன்றம்.


## aanmeegamalar.com வழங்கும்

# தினம் ஒரு திருக்குறள்



ஆன்மிகமலர்.காம் இணையதளம் சார்பில் தினமும் ஒரு திருக்குறளை வாட்சப்பில் பெற விரும்புபவர்கள் 9444228203 என்ற வாட்சப் எண்ணிற்கு Thirukkural என டைப் செய்து அனுப்பிவையுங்கள். aanmeegamalar.com - whatsapp குருப்பில் இணைந்து தினமும் ஒரு அழகிய வடிவமைப்புடன் கூடிய திருக்குறளை பெறுங்கள்

# ஆத்ம ஞானத்தின் நிரூபணம் என்ன?

அன்பு குருதேவர் அருளுகிறார்: “நீங்கள் ஏதாவதொன்றை தீவிரமாகக் கற்பனை செய்தால், அதில் இயற்கையான உண்மைநிலை இல்லாததால், அது ஒரு மனத்தோற்றமாகப் புலப்படுகின்றது. கற்பனைக்கும் ஆத்ம – ஞானத்திற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும். ஆத்ம – ஞானத்தின் அதாவது உங்களுக்குள் இறைவனின் உணர்வுநிலை இருப்பதின் – அடிப்படை நிரூபணம் உண்மையாகவும் நிபந்தனையற்றும் சந்தோஷமாக இருப்பதாகும். நீங்கள் தியானத்தின் மூலம் ஆனந்தத்தை மேன்மேலும் தடையின்றி பெற்றுக்கொண்டிருந்தால், இறைவன் உங்களுக்குள் அவனுடைய இருப்பை வெளிப்படுத்தச் செய்கிறான் என்பதை




நீங்கள் அறியக்கூடும். இறை ஆனந்தத்தின் ஓட்டத்தில் ஒரு தடை இருக்குமானால், உங்களுடைய உணர்வுநிலையில் ஏதோ ஒரு தவறு உங்களுடைய குருவின் உதவியுடன் அகற்றப்பட வேண்டிய ஏதோ ஒரு மனக்கோணல் ஏற்பட்டுள்ளது என்பதாகும். தியானம் செய்வதன் மூலமும், குருவினுடைய உபதேசங்களை – அவர் உங்களுக்கு அளித்துள்ள சாதனை (ஒருவருக்கு, அவருடைய குருவினால் கொடுக்கப்பட்ட ஆன்மீக ஒழுக்கமார்க்கமும் போதனையும்) யை – பின்பற்றுவதன் மூலமும் அவருடன் நிலையான தொடர்பை வைத்துக் கொள்வதால், அவர் உங்களுக்காக அந்த மனக்கோணலை நேர்படுத்திவிடுவார்.”

மேலும் அவர் தொடர்கிறார்; “நீங்கள் இறை ஞானம் பெற்றுவிட்டதாக எண்ணுவதால் மட்டுமே நீங்கள் இறைவனுடன் இருக்க முடியாது. உங்களை, நீங்களே செம்மைப்படுத்திக்கொள்ளவேண்டும்; உங்களை நீங்களே முழுமைப்படுத்திக்கொள்ளவேண்டும். சாத்தியமாகக்கூடிய இறைஞானத்திற்கும் உண்மையான இறைஞானத்திற்கும் இடையே மிக அதிக வேறுபாடு உண்டு. அவனைப் பணிவு, அறிவு மற்றும் பக்தி ஆகியவற்றைத் தவிர வேறு எதனாலும் ஒருபோதும் அறியமுடியாது. பணிவுள்ள ஒரு மனிதனே இறைவனை அறிவான். தாமாகவே உயர் உணர்வுநிலைக்கு ஆழ்ந்து செல்வோர், அசாதாரண ஆன்மீக சக்திகளையும், இயற்கை சக்திகளின் மீதான கட்டுப்பாட்டையும் விருத்தி செய்து கொள்கின்றனர். ஆனால் உண்மையான இறை உணர்வு உடைய எந்த மனிதனும் தனது சக்திகளை விவேகமற்ற முறையில், அகந்தையின் பகட்டை வெளிக்காட்டுவதற்காக ஒருபோதும் பயன்படுத்தமாட்டான். இறைவன்தான் ஒரே கர்த்தா, என்பதை மகான்கள் உணர்ந்து, அவன் அவர்களுக்கு அருளியுள்ள விசேஷமான கொடைகளை

125
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக




அவனுக்கே பணிவுடன் அர்ப்பணிக்கின்றனர். சராசரத்திலுள்ள ஒவ்வொன்றும் ஓர் அர்புதம் அல்லவா? மனிதனுடைய வெறும் இருப்பினாலேயே அவன் ஓர் அற்புதம் அல்லவா? இறைவன் படைத்துள்ள அனைத்து அதிசயங்களுடன் மனிதர்கள் திருப்தியடையாவிட்டால், அவனுடைய மகான்கள் ஏன் இன்னும் அற்புதங்களைச் செய்து காட்டவேண்டும்? அவர்கள் பெரும்பொலும் புரிந்துகொள்ளமுடியாத ஒரு விசேஷ காரணத்திற்காக – இறைவன் அவர்களுக்குக் கட்டளையிட்டாலொழிய – ஒருபோதும் செய்து காட்டமாட்டார்கள்.''

ஓர் அற்புதமான உலகில் வாழுங்கள்.

ப்ரிய குருதேவர் அருளுகிறார்: ''நான் அடிக்கடி கூறுவதுண்டு. நீங்கள் ஒரு மணிநேரம் படித்தால் இரண்டு மணி நேரத்திற்கு எழுதுங்கள்; நீங்கள் இரண்டுமணிநேரம் எழுதினால், மூன்று மணி நேரத்திற்குச் சிந்தியுங்கள்; நீங்கள் மூன்று மணிநேரம் சிந்தித்தால் எல்லா நேரமும் தியானம் செய்யுங்கள். சகல இன்பங்களின் உறைவிடம் இறைவன்; நீங்கள் அவனுடன் தினசரி வாழ்வில் தொடர்பு கொள்ளவும் முடியும். இருந்தாலும் மனிதன் துயரத்திற்கு அழைத்துச்செல்லும் முயற்சிகளில் தன்னை அதிகமாக ஈடுபடுத்திக் கொள்கிறான். மனநிலைகளை அழிப்பதற்கும், ஓர் அற்புதமான உலகில் வாழ்வதற்கும் ஒரு சிறந்த மார்க்கம் தியானமாகும். ஒரு மகா ரிஷியான நாரதர், ''இறைவா, நான் உன் புகழை பாடிக்கொண்டிருந்தேன்; அப்பொழுது உன்னுள் என்னை இழந்தேன். நான் இந்த உணர்வு நிலைக்குத் திரும்பியபோது , நான் எனது பழைய தேகத்திலிருந்து நழுவிவிட்டதையும், எனக்கு ஒரு புதிய தேகத்தை நீ தந்துள்ளதையும் கண்டேன்'' எனக்கூறியபொழுது அவர் அவ்வுலகை அறிந்திருந்தார்.

மேலும் அவர் ஒரு கதை கூறுகிறார்: இதைப்போன்ற ஒரு கதை மற்றொரு முனிவரைப்பற்றி இந்தியாவில் கூறப்படுகின்றது. ஓர் இளைஞன் அப்போதுதான் இறந்துவிட்டிருந்தான். அவனது உடல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. துக்கத்துடனிருந்தவர்கள் தீ மூட்டுவதற்கென ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தனர். அப்போது திடீரென ஒரு முதியவர், ''நிறுத்துங்கள், அந்த உடலை நான் பயன்படுத்துவேன்.'' என உரக்கக் கூறிக்கொண்டு ஓடி வந்தார். அவர் அதைச் சொல்லி முடித்தவுடன், அந்த முதியவரது உடல் உயிரற்று தரையில் விழுந்தது. இளைஞன் சிதையிலிருந்து எழுந்து காட்டை நோக்கி ஓடிவிட்டான். முதியவர் ஒரு மாபெரும் முனிவர். அவர் ஒரு சிசுவின் அனுகூலமற்ற உடலில் மீண்டும் பிறவி எடுத்துத் தனது சாதனைகளுக்குத் தடை ஏற்படுத்த விரும்பவில்லை,''

பகவத் கீதையிலுள்ள ஒரு ஸ்லோகத்தை கீழ்கண்டவாறு குறிப்பிட விழைகின்றேன்.

ஸர்வபூதேஷு யேனநகம் பாவமவ்யயமீக்ஷதே
அவிபக்தம் விபக்தேஷு தத்
ஜ்ஞானம் வித்தி ஸாத்விகம்.

பொருட்களும் மனிதர்களுமெல்லாம் வெவ்வேறாகக் காணப்பட்டாலும் இடைவிடாமலுள்ள ஒரே ஒரு சைதன்யத்தை மட்டும் அழிவற்றதாகக் காணப்படுகிறது என்பது சாத்வீகமான ஞானமாகிறது. ஞானமென்று சொன்னால் அறிவு என்பதுதான் பொருள் என்றாலும் ஆத்மாவைப் பற்றியுள்ள அறிவைத்தான் ஞானம் என்று கூறுகிறது; அவ்வாறின்றி உலகப்பொருட்களைப்பற்றிய அறிவை அல்ல. விஷயபோதம் எல்லா ஜீவிகளுக்கும் உண்டு. ஆனால் ஞானம் மிகக் குறைவானவர்களுக்கு மட்டும்தான் உள்ளது. தாம் ஆத்மாவென்றும், ஆத்மா சரீரம் போன்ற உபாதிக்களைக் கடந்துள்ளது என்பதை அறிந்தாலும் ஆத்மா அனைத்திற்கும் மேலானது என்றும் ஒன்றானது என்றும் சத் என்றும் உள்ள அறிவு ஸத்துவ குணம் அபிவிருத்தியானால்

மட்டும்தான் உண்டாகிறது. மலர்மாலைகளிலுள்ள முடிச்சிகள் வெவ்வேறானது என்றாலும் எல்லா முடிச்சிகளின் உள்ளே வியாபித்து வெவ்வேறான முடிச்சிகளையெல்லாம் ஒரே நூலில் ஏற்படுத்தியுள்ளது போன்று எல்லா ஜீவராசிகளின் உள்ளும் புறமும் வியாபித்துள்ள ஆத்மசைதன்யம் அனைத்திற்கும் மேலானதும் பிரிக்க முடியாததும் ஒன்றானது என்றுமுள்ள அறிவுதான் சாத்வீகமான அறிவு. அதுவே உண்மையான ஞானம். இந்த அறிவு வரும்பொழுது எல்லா ஜீவராசிகளிலுள்ள வித்தியசமான எண்ணம் மாறி எல்லாம் ஒன்று என்ற எண்ணம் உண்டாகும். அப்பொழுது எல்லாவித விருப்பு வெறுப்புகளும் போட்டி பொறாமைகளும் மாறி சித்தம் பரிசுத்தமாகிவிடும் (பகவத் கீதை அத்.18 ஸ்லோகம் 20)


குருப்ரியா

பகவத் கீதையில் கூறப்பட்டுள்ள இந்த அறிவு எப்படி ஏற்படுகிறது என்றால் அது தியானத்தால் மட்டும்தான். தியானம் ஒன்றினால் மட்டும்தான் அத்வைதமாகின்ற இறைவனை அறிய முடியும். குருதேவர் கூறும் ஆத்ம ஞான நிரூபணம் என்பது இதுதான் என்றுதான் நான் நினைக்கிறேன். இறைவன் மட்டும் தான் இந்தப் பிரபஞ்சத்தின் ஒரே கர்த்தா என்பதை கூறுபவர்கள் மகான்கள்தான். அந்த நிலைக்கு வந்தவர்களுக்கு மட்டும்தான் மேலே கூறிய ஆத்ம ஞானத்திற்கு உரிமையாளர்கள்.

தியானத்தால் மட்டும்தான் மனிதன் தன்னை இவ்வாறான தன்மையுடையதாக மாற்ற முடியும். துணிகள், பாத்திரங்கள் போன்றவை அழுக்கானால் அல்லது கறையானால் அவற்றை அழுக்கு நீக்கி அல்லது கறைநீக்கி சோப்பு பயன்படுத்தி அழுக்கினை நீக்கலாம். அதேபோன்று, இறைவனைக் காண்பதோ, அல்லது இறைவனை அடைவதோ நினைத்தவுடனேயே நடப்பதன்று. அதை நினைத்து பார்க்கக்கூட முடியாது. அந்த எண்ணம் வரவேண்டுமென்றால் முற்பிறவிகளில் செய்துள்ள நல்வினைகளும் தியானமும்தான் காரணமாகிறது. இறைவனைக் காணவும் அடையவும் வேண்டுமென்றால், நாம் இதுவரை எத்தனை பிறவிகள் எடுத்துள்ளதோ அத்துனை பிறவிகளில் நாம் செய்துள்ள வினைகள் எல்லாவற்றையும் தீர்த்தால் மட்டும்தான் இறைவனை அடைய முடியும் என மகான்கள் கூறுகின்றனர். கர்மாவைத்துடைப்பது குருதேவரால் மட்டும்தான் முடியும். நமக்கும் இறைவனுக்கும் நடுவில் மத்தியஸ்தராக இருப்பவர் குருதேவர். குருதேவர் இல்லையெனில் அவ்வளவு பெரிய நெருப்பாகிய இறைவனிடத்தில் நாம் சேர முடியாது. நம் கர்மா அனைத்தையும் துடைத்து பரிசுத்தமாக்கினால்தான் அது நடக்கும். அதற்கு தியானம் செய்யவேண்டும். தியானம் என்பது அழுக்கு நீக்கி அல்லது 'கறைநீக்கி' என்று சொல்ல வேண்டும். இந்தக் கறைநீக்கியைப் பயன்படுத்தி கர்ம வினைகளைத் தீர்த்து ஆத்ம ஞானம் பெற்று அவனை அடையாலாம். அப்பொழுது அனைத்திற்கும் ஒரே கர்த்தா இறைவன் என்பதை உணரலாம். இதைத்தான் ஆத்மஞானம் என்று மகான்கள் கூறுவது. குருதேவர் கூறியுள்ள கதை மற்றும் நிகழ்வினைப் பார்க்கும் போது அந்த உணர்வு நிலையில் உள்ளவர்கள் இறைவனின் சாம்ராஜ்யத்தை அறிந்தவர்களாவர். அவர்கள் ஆத்ம – ஞானத்தின் நிரூபணமும் ஆகிறார்கள். இதை மனிதர்களான நாம் அனைவரும் பெறுவதே நம் கடமையும் பொறுப்புமாகும். குருதேவரின் போதனைகள் அதற்கு உதவியாக உள்ளன.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி கலியபெருமாள்)
சர்பதிவாளர் (ஓய்வு) Cell No.9894595909





மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்

# சொர்ண புஷ்பத்துக்கு இணையான மலரை காண்பித்த சிவபெருமான் வாயிலை பார்த்தவாறு அமர்ந்த நந்தி

காலந்தோறும் கொண்டாடப்பட வேண்டிய திருக்கோவில்களைக் கொண்டது நமது தமிழகம் என்பதில் நாம் பெருமைகொள்ள வேண்டும். அப்படிப்பட்ட ஆலயங்களை கண்போல பாதுகாத்து, பின்வரும் தலைமுறையினருக்கு காட்டிட வேண்டியதும் நமது தலையாயக் கடமையாகும்.

அந்த வரிசையில் ஓர் சிறந்த காலப் பொக்கிஷமாகத் திகழ்கிறது தொண்டை மண்டலத்தின் "வானவன்மாதேவி" என்னும் மானாம்பதி திருத்தலம்.

ஆதியில் சூரபத்மனால் தேவர்கள் அனைவரும் சிறைபிடிக்கப்பட்டனர். செய்வதறியாது திகைத்த தேவர்கோன் இந்திரனும் இந்திராணியும் பூவுலகம் வந்தனர். கொக்கு மந்தாரை வனமாகத் திகழ்ந்த இப்பதியில் ஈசனை வணங்கி நின்றனர். ஈசன் அசரீரியாக....தன்னை பூஜிக்கும்படி அறிவுறுத்தினார். அதன்படி இந்திரன் இத்தலத்தினில் தீர்த்தம் ஒன்று ஏற்படுத்தி, அத்தீர்த்த நீரை கங்கையாக பாவித்து, அன்னை இந்திராணியுடன் சேர்ந்து பூஜித்தான்.

மீண்டும் இறைவன் அசரீரியாக.....தனக்கு சொர்ண [தங்க] புஷ்பம் சாற்றும்படி கோரினார். "செல்வங்கள் அனைத்தையும் இழந்து நிற்கும் இவ்வேளையில் நாங்கள் சொர்ண புஷ்பத்தினை எவ்வாறு சாற்ற முடியும்?? எனக் கலங்கினாள் இந்திராணி. அதற்கு இறைவனோ....கொக்கு மந்தாரை மலர் ஒன்று ஒரு சொர்ண (தங்க) புஷ்பத்திற்கு சமம்" என அருள் மொழிந்தார். அதன்படியே கொக்கு மந்தாரை மலர்களால் சிவனை அர்ச்சனை செய்து, ஆராதித்தனர். காத்தருள வேண்டும் என கரம் கூப்பி நின்றனர்.

ஆறுமுகன் பிறப்பு குறித்தும், ஆறுமுகனால்




www.aanmeegamalar.com






சூரபத்மனின் அழிவு குறித்தும் வாக்களித்தாஈசன், எம்மை இங்கு வழிபட்டதன் விளைவாக, இழந்த செல்வங்கள் அனைத்தையும் மீண்டும் பெற்று, இந்திரலோகத்தை ஆள்வீர்கள் என மேலும் உறுதியளித்தார்.

இத்தல ஈசனது அருளால் முருகன் பிறந்து அசுரனை வென்று, அமராவதிப் பட்டணத்தை தேவேந்திரனுக்கு வழங்கினார். இந்திராணி வேண்டியபடி இழந்த அனைத்து செல்வங்களையும் பெற்றாள். சூரபத்மனை அழித்து, அமரர்களின் பெருவாழ்விற்கு வித்திட்ட முருகப்பெருமானை ஐப்பசி மாதம் கார்த்திகை நட்சத்திரத்தன்று தன்னுடைய வெள்ளை யானையில் அமர வைத்து, வெற்றி விழாவாகக் கொண்டாடி மகிழ்ந்தான் தேவேந்திரன். இவ்விழாவே வருடாவருடம் ஐப்பசி மாதம் ஆறு தினங்கள் கந்தர்சஷ்டி பெரு விழாவாகக் கொண்டாடப்படுகின்றது.

வானோர்கள் சார்பாக இந்திரனும் இந்தி ராணியும் வழிபட்டதால் இத்தல ஈசர், வான சுந்தரேஸ்வரர் என வழங்கப்படலானார். இத் தலமும் "வானவன்பதி" என்றானது. இந்திரன் உண்டாக்கிய தீர்த்தம் "இந்திர தீர்த்தம்" என்று அழைக்கப்படுகின்றது.

மலையன், மாகரன் என்னும் அசுரர்கள்தனது படைகளோடு போரிட்டபோது தேவர்கள்சோர்ந் தனர். அவர்களது உதவிக்காக இந்த மானாம்பதி யோடு, பெருநகர், உக்கல், திருவத்திபுரம் போன்ற 18 ஊர் நந்திகளும், பூதகணங்களும் வந்தன என்று "இளையனார் வேலூர்" ஆலய வரலாறு கூறுகின்றது. இதன் பொருட்டே திருவத்திபுரம் ஸ்ரீ வேதபுரீஸ்வரர் ஆலயத்தில் நந்திதேவர் வாயி லைப் பார்த்தபடி அமர்ந்திருப்பார்.

"சுங்கம் தவிர்த்த சோழன்" என போற்றப்பட்ட இரண்டாம் பராந்தகன் என்னும் சுந்தரச்சோழன் கி.பி. 968 இல் சோழ தேசங்களை ஆண்டபோது, இந்த வானவன்பதியில் [மானாம்பதி] பிறந்த மலையான் பரம்பரையைச் சேர்ந்த வானவன் மாதேவியை மணந்தான். வானவன் மாதேவியார் பிறந்த இந்த ஊரில் பிராமணர்களை குடியமர்த்தி, வேத பாடசாலைகளை நிறுவினான். அதோடு இந்த பதிக்கு....."வானவன்மாதேவி சதுர்வேதி மங்கலம்" என்கிற பெயரையும் சூட்டி மகிழ்ந்தான்.

வானவன்பதி மற்றும் வானவன்மாதேவிபுரம் என்கிற இவ்வூரின் பெயர் இன்று மானாம்பதி என மருவியுள்ளது.

இராஜேந்திரச் சோழனால் கி.பி. 1020 ஆம் ஆண்டு மானாம்பதி ஆலயம் கல் கட்டிடமாகக் கட்டப்பட்டுள்ளது.

ஊரின் மையமாக ஒதுங்கிய ஐந்து நிலை இராஜ கோபுரத்துடன் நமை வரவேற்கிறது ஆலயம்.

ஆலயத்தின் கிழக்கே இந்திர தீர்த்தம் நாற்புறமும் படிகள் சூழ எழில் கூட்டுகின்றது. கிழக்குமுக வாயில் வழியாக உள்ளே நுழைந்து, பலிபீடம், கொடிமரம் மற்றும் நந்தியம்பெருமானை வணங்குகின்றோம். இடப்புறம் வாகனக்கொட்டடி யுள்ளது. இரண்டு பிரகாரங்களைக் கொண் டுள்ளது. வெளிச்சுற்று மிகவும் விசாலமானது. உள்சுற்றுடனான அனைத்து சன்னிதிகளும் ஒரே மூடு மண்டபத்தின் கீழ் அமையப்பெற்றுள்ளது.

உள்ளே முதலில் தென்திசை பார்த்தவாறு அம்பிகை சன்னிதியுள்ளது. கருவறையுள் நான்கு கரங்களுடன் நின்றவண்ணம் அருள்மழை பொழிகின்றாள் ஸ்ரீ பெரியநாயகி. வடமொழியில் பிரகன்நாயகி என அழைக்கப்படுகின்றாள்.

அருள் நிறைந்த அன்னையின் தரிசனம் முடித்து, மேற்கு நோக்கி நகர..... நேராக 16 கால் மண்டபத்தைக் கடந்து, அர்த்த மண்ட பத்தில் நிற்கிறோம். அளப்பரிய பெருமான் ஸ்ரீ வானசுந்தரேஸ்வரர் அழகிய லிங்க உருவில் திருவருள் பொழிகின்றார்.

உள்சுற்று வலம் வருகையில் முறையான கோஷ்ட தெய்வங்களை கண்ணுறுகின்றோம்.

நிருர்தியில் தல கணபதி கம்பீரமாக காட்சி தருகின்றார். மேற்கில் கந்தன் தனது துணைவியர் களோடு வீற்றருள்கின்றார். ஈசான திசையில் கலை பொக்கிஷமாய் சுமார் நான்கடி உயரத்தில் திகழ்கின்றார் ஸ்ரீ காலபைரவர். அவரருகே ஸ்ரீ மஹாவிஷ்ணு திருக்காட்சி தருகின்றார்.




பராந்தகச் சோழன் மற்றும் வானவன்மாதேவி யரின் சிற்பம் மேற்கு திருமாளிகைபத்தியில் புடைப்புச் சிற்பமாக வடிக்கப்பட் டுள்ளது. வெளிச்சுற்றின்போது துவார கணபதி யை வணங்குகின்றோம். பின்புறம் மந்தார விருக்ஷத் தின் வாசம் நம்மை மயக்குகின்றது.

முதலாம் இராஜேந்திரனால் இவ்வூரின் எல்லை தெய்வங்களான சோழியம்மன், சப்த மாதாக்கள் மற்றும் திரௌபதி ஆலயங்கள் எழுப்பப் பட்டுள்ளன. இவ்வாலயத்தில் 9 கல்வெட்டுகள் படி எடுக்கப்பட்டுள்ளன.

அதில் கி.பி.1252 இல் இக்கோவிலின் உள் பிரகாரத்தில் உள்ள கணபதி சிலையை வீர பாண்டியன் அகமுடையன் வடித்துள்ளான்.

கி.பி. 1344 இல் முதலாம் இராஜநாராயண சம்புவராயன் ஆலய வழிபாட்டு செலவிற்காக மானாம்பதி அருகிலுள்ள விசூர் கிராமத்தின் இருவேலி நிலத்தை சர்வ மானியமாக அளித் துள்ளான். கி.பி. 1390 ஆம் ஆண்டு விஜய நகர மன்னராட்சியில், இவ்வூரில் வசித்த தளபதி வானன் என்பவன் விசூர் கிராமத்தின் நில தானங்களை வானவன்மாதேவி சுந்தரேஸ்வரர் கோவில் கோவில் பெயரில் பத்திரப்பதிவு (அடை ஓலை) செய்துள்ளான். அதோடு, கோவில் திரு விழா மற்றும் இதர வழிபாட்டிறகு ஏற்பாடு செய் துள்ளான்.

கி.பி. 1420 இல் வீரதேவராய னின் ஆணைப் படி நெசவாளர் களுக்கு விதிக்கப்பட்ட கூடுதல் வரி ரத்து செய்யப்பட்டு, வழிவகை செய்யப்பட்டுள் ளது.

கி.பி. 1600 இல் இவ்வூரில் சந்தைமேடு தொடங்கப்பட்டுள்ளது. கி.பி.1610 இல் "அல்லாயம்" என்கிற வரி வசூல் செய்யப்பட்டுள்ளது.

மானாம்பதி செங்குந்தர் சமுதாயத்திற்குச் சொந்தமான இக் கோயிலில் தினமும் இரண்டு கால பூஜைகள் நடைபெறுகின்றன.



மோ.கணேஷ்

தினமும் காலை 6 மணி முதல் 11 மணி வரையும், மாலை 5 மணி முதல் 8 மணி வரையும் ஆலயம் திறந்திருக்கும். இத்தலத்தின் தீர்த்தமாக இந்திர தீர்த்தம் மற்றும் செய்யாறும், தல விருக்ஷமாக கொக்கு மந்தாரையும் திகழ் கின்றன.

இவ்வாலய விசேடங்களாக... மாத பிரதோஷங்கள், வெள் ளிக்கிழமைகளில் சுக்கிரவாரத்தம மன் வழிபாடு, சித்ரா பௌர்ணமி, வைகாசி விசாகம், ஆனித்திருமஞ்சனம் நட ராஜர் அபிஷேகம், ஐப்பசி அன்னாபிஷேகம், கார்த்திகை சோமவாரங்களில் சங்காபிஷேகம், கார்த்திகை தீபம், ஆருத்ரா, சிவராத்திரி, பங்குனி உத்திர திருக்கல்யாண உற்சவம் போன்றவை நடைபெறுகின்றன.

அதோடு, தைப்பூசத்தன்று கந்தமாநதி என்னும் செய்யாற்றில் 18 ஊர்களிலிருந்து சுவாமி அம்பாள் அலங்காரத்தோடு குழுமும் ஆற்றுத் திருவிழா வெகு விமர்சையாக கொண்டாடப்படுகின்றது. அன்று அன்னதானமும் அளிக்கப்படுகின்றது.

ஒரு வில்வ இலைக்கு ஒரு லட்சம் சொர்ண புஷ்பத்தால் அர்ச்சனை செய்த பலன் கிட்டும் என்பதால், வில்வ இலைகளால் அஷ்டமி, திரயோதசி, சதுர்த்தி ஆகிய திதிகளில் வான சுந்தரருக்கு சாற்றி வழிபட்டால் சகலவிதமான நன்மைகளும் உண்டாகும். கொக்கு மந்தாரை மலர்களால் இறைவன் இறைவியை அர்ச்சித்து வழிபட, கணவனைப் பிரிந்து வாடும் மங்கையர்கள் ஒன்றிணைவர்.

செல்வம், கல்வி மற்றும் பட்டம் பதவி பெற் றிட, வெள்ளெருக்கு மலர்களாலும், எதிரிகள் விலகிட, நாகலிங்க மலர்களாலும் இத்தல ஈசனை அர்ச்சித்து வழிபட சிறந்த பலன் களை பெறுவது திண்ணம். காஞ்சிபுரம் மாவட்டம், உத்தரமேரூர் வட்டத்தில் உள்ள இந்த ஊர், காஞ் சிபுரம் வந்தவாசி சாலையில் உள்ள உத்திரமேரூர் கூட்டுரோட்டில் இருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. வந்தவாசி, உத்திரமேரூர் மற்றும் காஞ்சிபுரத்தில் இருந்து மானாம்பதிக்கு வர நிறைய பேருந்துகள் உள்ளன...

ஜோதிட கலாநிதி
பழங்காமூர் மோ.கணேஷ்
குருக்கள், ஆரணி,
தொடர்புக்கு: 9789156179.

# இறைவனை அடைய திருமூலர் கூறும் வழி



உலக உயிர்கள் அனைத்தும் இறைநிலையிலிருந்து வந்தவையே. அவ்வாறு வந்த இவை அனைத்தும் மீண்டும் இறைநிலையோடுதான் இணையும். இதுவே உலக நியதி. எனினும் இந்த செயல்பாட்டினைத் தடுத்து நிறுத்துவதாக, மனம், ஆணவம், நான் என்ற அகங்காரம், குரோதம், மாயை, கோபம், மரண பயம், காமம் என்ற எட்டுக் குணங்களும் நம்முடைய ஆன்மாவை இருக்கப் பற்றிக்கொண்டுள்ளதால், ஆன்மா இறை நிலையை அடையவிடாமல் இவை தடுக்கின்றன. இவற்றிலிருந்து நீங்கினால்தான் நாம் இறைவனை அடையமுடியும். இவற்றிலிருந்து எவ்வாறு நீங்குவது என்பதைத்தான் திருமூலர், பதிவலியில் விரட்டம் என்று குறிப்பிடுகின்றார்.

ஆன்மாவைப் பற்றிக்கொண்டுள்ள இந்த எட்டு அரக்கர்களிடமிருந்து நாம் விடுதலையடைய வேண்டுமாயின் இறைவனின் திருவடியை இடைவிடாது நினைக்க வேண்டும் என்கின்றார். இவ்வாறு இடைவிடாமல் இறைவனுடைய திருவடியழகை நினைத்திருந்தோமானால், பல் வேறு ஆயுதங்களால் இந்த எட்டு அரக்கர் களையும் அழித்து, அவர் அருகிலேயே என்றும் இருக்கக்கூடிய வீடுபேற்றின்பத்தை அளித்து தவுவார் என்கின்றார்.

ஆன்மாவை ஆட்கொண்டுள்ள எட்டுவகையான அரக்கர்களை அழிக்கும் முறை.

**1.மனம்:** மனம் என்பது எல்லாவற்றையும் தன்னுடையது என்று எண்ண வைக்கும் ஒன்று. மனத்திற்குக் கட்டுப்பாடுகளே கிடையாது. அதற்கு நல்லது கெட்டது தெரியாது. மனம் போன போக்கில் செல்கின்றான் என்று கூறுவதும் இதன் அடிப்படையில்தான்.

அறியாமை என்ற கண்தெரியாத இருட்டில் இருக்கின்ற மனமானது, ஆன்மாவை இறைவன் பால் செல்ல விடாமல், தீய எண்ணத்துடன் வதைத்துக்கொண்டே இருக்கும். ஒருநாள் ஆன்மா இறைவனை நோக்கி, இறைவா என்னைக் காப்பாற்று என்று வேண்டிக்கொள்ளும். அப்போது இறைவன், இருட்டில் உள்ள மனத்திற்கு ஒளியைக் கொடுத்து அறியாமை என்ற தீயஎண்ணங்களை வென்று, உயிரைக் காப்பாற்றி அருள்வார் என்று, மனம் என்ற முதல் அரக்கனை எவ்வாறு வெல்வது என்ற உண்மையை,

"கருத்துறை அந்தகன் தன்போல் அசுரன்
வரத்தின் உலகத் துயிர்களை எல்லாம்
வருத்தஞ்செய் தானென்று வானவர் வேண்டக்
குருத்துயர் சூலங்கைக் கொண்டுகொன் றானே"

– (திருமந்திரம் 339) என்ற பாடல் வரிகளில் குறிப்பிடுகின்றார்.

**2.ஆணவம்:** தான் என்ற ஆணவம் வேரோடு அழிக்கும் தன்மை கொண்டது. தான்தான் என்று அணவம் கொண்டு வாழ்ந்த பலரும் இருக்கும் இடம் தெரியாமல் சென்ற வரலாறு நம்மிடம் பல உண்டு. ஆன்மாவை இறைவனிடம் செல்லவிடாமல் தடுக்கும் அரக்கர்களில் மிகவும் குறிப்பிடத்தக்க அரக்கன் இந்த ஆணவமே. இது இறைவனையே யார் என்று கேட்டு, இறைவனிடமே போட்டிப்போடும் தன்மை கொண்டது.

உயிர்கள் அனைத்தும் தங்களுடைய கர்மாக்களைத் தீர்க்கவே பிறக்கின்றன. எனினும், கர்மாக்கள் தீர்ந்த பிறகும் இறைவனிடம் அவ்வுயிர்கள் செல்லமுடியாமைக்குக் காரணம், தான் என்ற இந்த ஆணவம் மனத்தினுள் குடிகொண்டு மற்றவர் சொல்ல விரும்புவதைக் கேட்காமல், தன் மனம்போன போக்கில் தீய வழியில் வழி நடத்துவதே ஆகும். நான் என்ற இத்தகைய ஆணவத்தை அழிக்கவேண்டுமானால், நான் என்பது இங்கு ஏதுமில்லை. எல்லாம் நீயே என்று

இறைவனிடம் சரணாகதி அடைய வேண்டும் என்று, அணவம் என்ற அரக்கனை அழிக்கும் வழியை,

"கொலையிற் பிழைத்த பிரசா பதியைத்
தலையைத் தடிந்திட்டுத் தானங்கி யிட்டு
நிலையுல குக்கிவன் வேண்டுமென் றெண்ணித்
தலையைப் பரிந்திட்டுச் சந்திசெய் தானே

– (திருமந்திரம் பா–340) என்ற திருமந்திர வரிகளில் உணர்த்துகின்றார்.

**3.அகங்காரம்:** உடல் நல்ல ஆரோக்கியமாக இருக்கும்போது நான்தான் எல்லாம் என்ற அகங்காரம் தலைதூக்கும். ஆரோக்கியம்குறைந்து விட்டால் அகங்காரமும் குறைந்து கடவு ளைத் தேடி உடல் அலையும்.

இந்த அகங்காரமானது, ஆன்மாவைத்தான் யார் என்பதை உணர விடாமல், நல்லகுணங் களை அழிப்பதுடன், இறைவனையும்அடையவிடாமல் செய்கின்றது. எனவே உடல் ஆரோக்கியமாக இருக்கும்போதேநான்தான் எல்லாம் என்ற அகங்காரத்தினை அடியோடு அழிக்கவேண்டு மானால் மனதில் இறைவனை எந்நேரமும் தியானிக்க வேண்டும். அவ்வாறு தியானித்தோ மானால், தன்னுடைய பக்தர்களுக்குப் பெருங் கருணை செய்கின்ற இறைவன், அகந்தையை அடியோடு வெட்டி யெடுத்து விடுவார் என்பதை,

"எங்கும் பரந்தும் இருநிலந் தாங்கியும்
தங்கும் படித்தவன் தாளுணர் தேவர்கள்
பொங்கும் சினத்துள் அயன்தலை முன்னற
அங்குஅச் சுதனை உதிரங்கொண் டானே"

(திருமந்திரம் 341) என்ற பாடல் வரிகளில் சுட்டுகின்றார்.

**4.குரோதம்:** இறைநிலையின் ஒரு பகுதியே நாம் அனைவரும். இறைநிலையிலிருந்து வந்த நாம் மீண்டும் இறைநிலையை சென்றடைவ தற்கிடையே நடைபெறும் நிகழ்வே வாழ்வியல் என்பது. நாம் மட்டும் இறைநிலையின் ஒரு பகுதி அல்ல. நமக்கு எதிரியாக நாம் யாரை எண்ணுகிறோமோ அவரும் இறை நிலையின் ஒரு பகுதியே என்பதை மிகத் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும். இதன் அடிப்படையில் ஆராய்ந்தோமானால் இந்த உலகில் உள்ள அனைவரும் இறைநிலை யிலிருந்து வந்தவர்களே என்பது விளங்கும். இந்த உண்மையை உணராமல், உயிர்கள் ஒருவர் மேல் ஒருவர் குரோதம் கொண்டு,


ப.கற்பகராமன்




ஆத்திரத்தில் அறிவிழந்து, அடுத்தவர் உள்ளும் இறைவன் இருக்கின்றான் என்பதை உணராமல், அந்த உயிர்களை அழிக்க பல செயல்களைச் செய்கின்றனர். அவ்வாறு செய்வதிலிருந்து நீங்கி, இறைவா நீயே அனைத்தும் என்று இனைவனைச் சரணாகதி அடைந்தோமானால் இறைவன் நம்மைக் காப்பார் என்பதனை,

"எங்கும் கலந்துமென் உள்ளத் தெழுகின்ற
அங்க முதல்வன் அருமறை யோதிபால்
பொங்குஞ் சலந்தரன் போர்செய்ய நீர்மையின்
அங்கு விரற்குறித்து ஆழிசெய் தானே"

(திருமந்திரம் 342) என்ற பாடல் வரிகளைக் கொண்டு படம் பிடித்துக் காட்டுகின்றார்.

**5. மும்மலம்:** ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றும் மூன்று புரங்களாக இருந்து நம்மை ஆட்டிப் படைக்கின்றன. தான் என்ற ஆணவமும், செய்கின்ற செயல்களுக்கு ஏற்ற எதிர்வினைகளா கிய கர்மாவும், நிலையில்லாததை நிலையானது என்று எண்ணி போலி வாழ்க்கை வாழும்மாயை யும் கீழ் நிலைக்கு அழைத்துச் செல்லும்குணங்க ளாகும். இறைவனைஅடைவதற் குத் தடை யாக இவை உள்ளன. இத்தீய குணங்கள் அழிய வேண்டுமானால் உலகில் நிகழும் அனைத்து நிகழ்வுகளுக்கும் இறைவனே முழுமுதற் காரணம் என்பதை உணர்ந்து, நம்மை இயக்குவதும் நம்முள் இருந்து இயங்குவதும் இறைவனே என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். அவ்வாறு உணர்ந்துகொண்டோமானால் முப்புரம் என்னும் இடத்தினை அழித்ததைப் போல நம்மிடமுள்ள மூன்று தீய குணங்களையும் அழித்து நம்மைக் காப்பார் என்ற ஆன்மீக உண்மையை,

"அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பார்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாருமறி யாரே"

– (திருமந்திரம் 343) என்ற பாடல்வழி உணர்த்துகின்றார்.

**6.கோபம்:** யார்மீது கோபப்படுகிறோமோ அவரை மட்டுமின்றி, யார் கோபப்படுகிறாரோ அவரையும் அழிக்கும் தன்மை கொண்டது கோபம். நமக்கு ஒருவர் தீமையையே செய்தாலும் நம்மைக் கோபப் படுத்துவது போன்ற செயல்களைச் செய்தாலும் அவர்மேல் நாம் சினம் கொள்ளக் கூடாது. ஏனெனில் கோபம் என்பது தீய விளைவையே உண்டாக்கும் என்பதனால் மறந்தும் யார்மீதும் கோபம் கொள்ளக் கூடாது என்பதனைத் திருவள்ளுவரும்,

"மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும்"

– (திருக்குறள் 303) என்ற குறளைக் கொண்டு குறிப்பிடுகின்றார்.

இத்தகைய கோபத்தினைப் பிறர்மேல் நாம் படும்போது, என்ன செய்கின்றோம், என்ன பேசுகின்றோம் என்று தெரியாமல் மதம் பிடித்த யானைபோல் மனம் ஆகிவிடுகின்றது. இந்நிலையில் மனதினை ஒருநிலைப்படுத்தி இறைவனை நினைத்திருந்தோமானால், நாம் நினைத்த அந்த நொடியே நம்முடைய கோபத்தினை அழித்து நம்மை ஆட்கொள்வார் இறைவன் என்பதனை,

"முத்தீக் கொளுவி முழங்கெரி வேள்வியுள்
அத்தி யுரியர னாவ தறிகிலர்
சத்தி கருதிய தாம்பல தேவரும்
அத்தீயின் உள்ளெழுந்த தன்று கொலையே"

– (திருமந்திரம் 344) என்ற வரிகளில் சுட்டுகின்றார்.

**7. மரண பயம்:** பிறந்தவர் அனைவரும் மரணிப்பது என்பது உலகம் அறிந்த ஒன்றே. மரணம் என்பது கருவில் குழந்தை உண்டான அந்த நொடியே முடிவுசெய்யப்பட்ட ஒன்றுஎன் றால், மரணத்தைக் கண்டு ஏன் பயப்பட வேண் டும்? நாம் பயப்படுவதால் மரணம் நம்மை நெருங்காமல் விடப்போகின்றதா? எனவேமரணம் என்பது நிச்சயம் உண்டு. அதற்கான பயம் மட்டும் தேவையில்லாதது என்று திருமூலர் குறிப் பிடுகின்றார். நிச்சயம் நிகழக்கூடிய ஒன்றின் மேல் பயம்கொள்வதால் ஒரு பயனும் இல்லை. மாறாக அவற்றின்மேல் கொள்ளும் பயத்தினை மட்டும் விட்டுவிட வேண்டும்.

மூலாதாராத்திலிருந்து எரிந்துகொண்டிருக்கும் குண்டலினி சக்தியை சுழுமுனை நாடி வழியே மேலேற்றி அதன் மூலம், அங்கே



சகஸ்ரதளத்தில் இருக்கின்ற இறைவனை உணர்ந்துகொள்பவர்களுக்குக் கோபமே வராது என்பதனை,

"மூலத் துவாரத்து மூளும் ஒருவனை
மேலைத் துவாரத்து மேலுற நோக்கிமுற்
காலுற்றுக் காலனைக் காய்தங்கி போகமாய்
ஞாலக் கடவூர் நலமாய் இருந்ததே"

(திருமந்திரம் 345) என்ற பாடல் வரிகளில் சுட்டுகின்றார்.

**8. காமம்:** காமம் என்ற ஒன்று, நாம் நமக்கான சந்ததியை பூவுலகில் விட்டுச் செல்வதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு செயல்தானே தவிர, அது என்றும் நிலைத்திருக்கக்கூடிய பேரின்பச்செயல் அல்ல. எவ்வளவு உயரத்தில்இருந்தாலும், பெண் ணாசையும் மண்ணாசையும் கொண்டிருந்தால் விரைவில் அவனுடைய அனைத்தும் வீழ்ந்துவிடும். உலக நன்மைக்காக இன்னொரு உருவைச் சேரும் உயிர்களைத் தனது துணையுடன் சேரும் உயிரினங்கள் இறைவனை அடையத் தடையாய் இருக்கும் காமம் என்ற நோயில் சிக்காமல் இறைவனை அடைய வேண்டும் என்றஒரு குறிக்கோளுடன் ஒருநிலைப்பாட்டில் இறைவனை வேண்ட, இறைவன் காமம் என்ற நோயிலிருந்து நம்மை மீட்டு, தன்னுடைய திருவடி காட்சியைத் தினம்தோறும் வழங்குவார் என்பதனை,

"இருந்த மனத்தை இசைய இருத்திப்
பொருந்தி இலிங்க வழியது போக்கித்
திருந்திய காமன் செயலழித் தங்கண்
அருந்தவ யோகங் கொறுக்கை அமர்ந்தே"

– (திருமந்திரம் 346) என்ற திருமந்திரப் பாடல் வரிகளில் விளக்குகின்றார்.

இறைநிலையில் இருந்து வந்த நாம் மீண் டும் இறைநிலையோடு இணைய இந்த எட்டு வகையான தடைகள் நம்முள் உள் ளன. இவற் றை ஒவ்வொன்றாக முறையே நீக்கிவிட்டு இறை நிலையோடு இணைந்து இன்புற்றிருப் போமாக.

முனைவர் ப. கற்பகராமன்
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை,
சோனாகலைமற்றும் அறிவியல் கல்லூரி,
சேலம் 05. போன்:9894210651

# நாட்டில் தோன்றுகின்ற பீதிக்கு பயமே மூல காரணம்

உயிர்ப்பு சக்தியுள்ள நற்குண நன்னடத்தை தன்மை என்ற ஒரு சொல்லுக்கு சிலர் குணபூதர்களாக வாழ்வார்கள். இத்தன்மை கொண்டவர்களுக்கு நியாயவான்கள் என்று பெயர். நியாயமே குணமாக இருப்பது என்பதுதான் இது.

❖❖❖

ஒரு மனிதன் தனது மூளையை உண்மையாகவும் நேர்மை யாகவும் இயக்கி வந்தானே ஆனால் அவன் நியாயவானாக இருப்பான். உலகில் அவனே நேர்மையாளன்.

❖❖❖

ஒரு நியாயாதிபதிக்கு இத்தகு தன்மைகளும் குணங்களும் அவரது வேகமாக இருந்தால் அந்த நியாயாதிபதி ஒரு சிந்தனை யாளராக இருப்பார்.

❖❖❖

ஒரு மனிதனை எப்படி ஆராய்வது என்றால் ஆணோ பெண் ணோ இருவரையும் அவர்களின் நியாயத்தன்மை என்ற குணத்தை எடுத்துக்கொண்டே ஆராய வேண்டும்.

❖❖❖

மேற்சொன்ன நியாயத்தன்மை என்ற குணம் என்பது தான் உண்மையான மனிதத்தன்மை ஆகும். இது சிறிதளவு குறைந்தாலும் மொத்தமாய் இல்லாமல் இருந்தாலும் எப்படியோ திடீரென்று இருபாலரிடத்தில் இருந்தும் இது மறைந்தாலும் அவர்கள் அனைவரும் கீழ்க்கண்ட வரிசைப்படி முறைப் படுத்தப்படுகிறார்கள். அது என்னவென்றால், அவன் நல்லவனல்ல, மேலும் அவன் சிறிதும் நல்லவன், இல்லையேல் கெட்டவன், சுமாரானவன், கொஞ்சம் சிறிதளவு நற்குணம் படைத்தவன் அல்லது முற்றிலும் உள்நோக்கமுடையவன் என்று இனம் பிரித்து விடலாம். இது ஒரு பட்டியல்.



❖❖❖

நீ நிச்சயமாக அநியாயத்தை குணமாக கொண்டவர்களை, நியாயமற்றவர்களை நம்பவே முடியாது. ஏனெனில் அவர்களது இதயம் கெட்ட எண்ணம் என்ற திருடர்கள் ஒளிந்து கொண்டிருக்கின்ற குகை ஆகும். உள்நோக்கமும் இப்படிப்பட்டதே. இத்த கையவர்களைப் பற்றி ஜாக்கிரதையாய் இரு.

❖❖❖

முற்றிலும் நியாயமான குணம் என்ற தன்மை நேர்மையான வழிக்கு ஆண்டவனின் துணை இல்லாமலேயே பாதையை வகுக்கும். அதனால் இத்தன்மையை அனைவரும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

❖❖❖

எல்லா மதங்களும், எல்லா மதத்தலைவர்களும் கட்டாயமாக இந்த நியாயத்தன்மை என்ற குணத்தைப் பரப்ப வேண்டும். அதன் பெயரே உண்மை என்று சொல்லி அதற்காக பாடுபட வேண்டும். இதுதான் அவர்களின் முதற்பணி ஆகும்.

❖❖❖

உண்மை என்பது எப்படி கொள்ளப்படுகிறது தெரியுமா? நேர்மையாக சிந்திப்பதனாலும் நியாயத்தன்மை என்ற குணத்தை




ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**C.V. நடராஜன்**
செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162182

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572

♦♦♦

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
**9444228203**


கொள்வதனாலும் அது அடையப்படுகிறது. இது ஒன்றே உலகத்தின் வெற்றிப் பெட்டகம்.

❖❖❖

ஆன்மவிடுதலையும், உயிரின் விடுதலையும் மேற்சொன்ன பாதையில் சென்றால் விரைவாக கிடைக்கிறது. மற்ற வழிகள் அனைத்தும் இரண்டாம் பட்சமே.

❖❖❖

சகித்துக் கொள்ள முடியாத ஒரு தன்மைக்கே பயம் என்று பெயர். இத்தன்மை அபாயத்திற்கு அருகாமையில் நம்மை இட்டுச் செல்லும். பயத்தின் காரணமாகத் தான் புனுகுப்பூனை குழி பறித்து எச்சமிட்டு தன் வாசனையை மறைக்க எச்சத்தை மண் இட்டு மூடுகிறது. பயத்தை நீண்ட நாள் விடாமல் இருக்காது. சொல்வதைக் கேட்கவில்லை என்றால் இது உனது தேகம், புத்தி, சிந்தனை இவைகளுக்கும் தொந்தரவைத் தந்துவிடும்.

❖❖❖

நாட்டில் பிறர் பயப்படும்படியாக அல்லது அவர்கள் உன்னை பயப்பட வேண்டும் என்பதற்காக பயத்தை உண்டு பண்ணாதே. இச்செய்கை உனக்கே ஒரு அபாயத்தின் அறிகுறி.

❖❖❖

ஒரு மனிதனைக் கண்டோ அல்லது ஒரு இனத்தை கண்டோ ஒட்டுமொத்தமாக பயப்படும் தன்மை உன்னிடத்தில் இருந்தால் அதை உடனே விட்டுவிடு. விட்டுவிட்டால் அதுவே உனக்கு பெரிய நிம்மதி.

❖❖❖

ஒரு விபத்து ஏற்படுவதற்கு முன்னால் ஏற்படுகின்ற சூழ் நிலைக்கு ஒரு நெருக்க சூழ்நிலை என்று பெயர். புலி மானைத் தாக்க பாய்வதைப் போன்றதே இது. இத்தன்மை மக்களுக்கு ஏற்பட்டால் பிறகே அவர்கள் சூழ்நிலையை உணர்ந்து பயப்பட ஆரம்பிக்கிறார்கள். நாட்டில் பல இடங்களில் தோன்றுகின்ற பீதிக்கு இந்த பயமே மூல காரணம். பிறரது பயத்தைக் கண்டே சிலர் அந்த இடத்தில் அசம்பாவிதத்தைத் தோற்றுவிக்கிறார்கள். இவர்கள் வீரர்களல்ல கோழைகளே.

❖❖❖

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

# மகா சிவராத்திரியும் நான்குசாம பூஜையும்



**மகா சிவராத்திரி பூஜை காலங்கள்**

**முதல் கால பூஜை இரவு, 7:30 மணி;**
**இரண்டாம் கால பூஜை இரவு 10:30 மணி;**
**மூன்றாம் கால பூஜை நள்ளிரவு 12:00 மணி;**
**நான்காம் கால பூஜை அதிகாலை, 4:30 மணிக்கு.**

மகாசிவராத்திரியன்று இறைவனுக்கு நான்கு ஜாம பூஜைகள் செய்யப்படும். ஒவ்வொரு ஜாமத்தின் போதும் அபிஷேக, ஆராதனைகள் செய்யப்படுவது வழக்கம்.

ஒவ்வொரு ஜாமத்திலும் செய்யப்படும் அபி ஷேக அர்ச்சனைகளைப் பார்க்கலாம்.

**முதல் ஜாமம்:** பஞ்ச கவ்ய அபிஷேகம், சந்தனப் பூச்சு, வில்வம், தாமரை அலங்காரம், அர்ச்சனை, பச்சைப் பயறுப் பொங்கல் நிவேதனம், ரிக்வேத பாராயணம்.

**இரண்டாம் ஜாமம்:** சர்க்கரை, பால், தயிர், நெய் கலந்த ரவை, பஞ்சாமிர்த அபிஷேகம், பச்சைக் கற்பூரம், பன்னீர் சேர்த்து அரைத்துச் சாத்துதல், துளசி அலங்காரம், வில்வம் அர்ச்சனை, பாயசம் நிவேதனம், யஜுர் வேத பாராயணம்.

**மூன்றாம் ஜாமம்:** தேன் அபிஷேகம், பச்சைக் கற்பூரம் சாத்துதல், மல்லிகை அலங்காரம், வில் வம் அர்ச்சனை, எள் அன்னம் நிவேதனம், சாம வேத பாராயணம்.

**நான்காம் ஜாமம்:** கருப்பஞ்சாறு அபிஷேகம், நந்தியா வட்டை மலர் சாத்துதல், அல்லி, நீலோற் பவம், நந்தியா வர்த்தம் அலங்காரம், அர்ச்சனை, சுத்தான்னம் நிவேதனம், அதர்வண வேதம்.

மகா சிவராத்திரி அன்று நாம் செய்ய கூடாத சில நடைமுறை பழக்கத்தை பற்றி தெரிந்து கொள்ள ஒருவரின் பதிவு..

நான் கடந்த வருடம் சிவராத்திரி அன்று பெரு மானை தரிசிக்க கோவில் சென்ற பொழுது ஒரு புரம் உணவு வழங்கப்பட்டு கொண்டு இருந்தது, மக்கள் உணவுகளை உண்டு விட்டு கோவிலில் இலைகளை சிதறி கோவிலை அசுத்தப்படுத்தி




கொண்டு இருந்தார்கள்.

மகா சிவராத்திரி அன்று செய்ய கூடாத மிக முக்கியமான தவறு பக்தர்களுக்கு உணவு அளிப்பது...

அடியார்கள், சிவாச்சாரியார்கள், கோவிலில் உள்ள குருக்கள் ஏன் இதை கவனித்து தானம் செய்பவர்களிடம் சொல்ல தவறுகிறார்கள் என்று

புரியவில்லை,

உண்மையில் சிவராத்திரி நமக்கு அருளப் பட்டதன் காரணத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

மனிதர்களுக்கு மிக முக்கியானது இரண்டு விஷயம். உணவு, நல்ல தூக்கம். இந்த இரண் டையும் விலக்கி, சிவனுக்காக நாம் விரதமிருப்பது தான் இந்த நாளின் நோக்கமாகும்.

உணவையும், உறக்கத்தையும் விலக்கினால் புலன்கள் தானாகவே அடங்கும். அப்போது இறையுணர்வு பெறமுடியும். நினைத்த காரியம் சித்தி ஆகும். வைகுண்ட ஏகாதசியும் இந்த நோக்கம் தான்.

கோவில் என்ன சிற்றுண்டி கடையா? இப்படி பிரசாதம் என்று அவர்கள் பசியை வெல்ல உதவாமல் தரிசிக்க வரும் பக்தர்களை பசியாற்றி மஹா சிவராத்திரி நோக்கத்தை கெடுத்து சாபத்தை பெறுகிறார்கள் என்ற காரணத்தை யார் சொல்வது. கோவில் நிர்வாகம் கண்டு கொள்வது இல்லை.

மகா சிவராத்திரி அன்று அம்பாளே உணவு அருந்தாமல் இருக்கும் பொழுது நமக்கு ஏன் உணவு?

மேலும் சிவபெருமான் ஆரவாரத்தை விரும்பாதவர், ஏகாந்தம்; ஏகாந்தம்; ஏகாந்தம். முற்றிலும் அமைதி இவர் விரும்புவது அமைதி

மஹா சிவராத்திரி அன்று சிவபுராணம், கோளறு பதிகம், லிங்காஷ்டகம், பஞ்சாட்சர ஸ்தோத்திரம், நடராஜப் பத்து, பரமசிவன் ஸ்தோத்திரங்களைப் படிக்கலாம். தமிழில் திருமறைகளையும் ஓதலாம்.

சிவராத்திரியன்று பஞ்சாட்ச மந்திரம் உச்சரிப்பதால் மற்ற நாட்களில் நூறு முறை பஞ்சாட்சரம் ஜெபித்த பலன் கிட்டும் என்கிறது சாஸ்திரம்.

ஆனால் பக்தர்களின் ஆரவாரம், கேளிக் கைகள், சப்தம் கோவிலை பிளக் கிறது. சிவராத்திரி விழாவாக மாறிக் கொண்டு இருக்கிறது.

ஆன்ம தரிசனம் தேடுபவர்கள்,

மாலை 6 மணிக்குள் குளித்து விட்டு, உணவு முடித்து விட்டு கோவிலுக்கு செல்லுங் கள், பணியில் உள்ளவர்கள் பணி முடித்து விட்டு குளித்து விட்டு கோவிலுக்கு சென்று அமைதி யாக ஒரு இடத்தில அமர்ந்து சிவ சிந்தனைகள் செய்தாலே போதுமானது.

மனதில் சொல்லவேண்டிய மந்திரம்

'சிவாய நம ஓம்

சிவாய வசி ஓம்

சிவ சிவ சிவ ஓம்'

இப்படி செய்வது ஒரு விதம்,

இன்னொரு வகை, 9 லிங்க தரிசனம், ஒரே இரவில் ஒன்பது லிங்கங்களை தரிசிப்பது சிறப்பு.

சிவ பெருமான் ஆலகால விஷத்தை உட் கொண்டதால் அவருடைய உடல் மிகவும் வெப்பமாக மாறி விடுவதாக ஐதீகம். அந்த வெப்பத்தைத் தணிப்பதற்காகவே அவருக்குப் பல்வேறு வகையான பொருட்களைக் கொண்டு



அபிஷேகம் செய்கிறோம்.

தேன், பால், தயிர், நெய் ஆகியவற்றால் அபிஷேகம் செய்வது எண்ணற்ற பலன்களைக் கொடுக்கக் கூடியது, முடிந்தால் இவைகளை கோவிலுக்கு உபயமாக தரலாம்.


அழகுராஜா

இப்படி சரியாக எதுவும் செய்யாமல் இரவு முழுவதும் தொலைகாட்சி பார்த்து கண்விழிப்பது, நண்பர்களுடன் பொழுது போக்கிற்காக கோவிலை சுற்றி வருவது, கோவிலில் உணவு கொடுத்து புண்ணியம் சேர்கிறேன் என்று செய்வது பலன் இல்லை.

சிவராத்திரி என்ற பெயர் வர காரணம் அம்பாள் தான். பிரளய காலத்தின் போது பிரம்மனும், அவரால் சிருஷ்டிக்கப்பட்ட அனைத்து ஜீவராசிகளும் அழிந்து விட்டநிலையில், இரவுப் பொழுதில் அம்பிகை உமாதேவி, பரமேஸ்வரனை நினைத்து பூஜை செய்தாள்.

நான்கு ஜாமங்களிலும் இரவு முழுவதும் ஆகம விதிப்படி அர்ச்சனை செய்தாள். பூஜையின் முடிவில் அம்பிகை ஈஸ்வரனை வணங்கி, அடியேன் தங்களைப் பூசித்த இந்த இரவை, தேவர்களும், மனிதர்களும் தங்கள் திருநாமத்தாலேயே, அதாவது "சிவராத்திரி" என்றே கொண்டாட வேண்டும் என்று வேண்டினாள்.

சிவராத்திரி அன்று, சூரியன் மறைந்தது முதல் மறுநாள் காலை சூரியன் உதயமாகும் வரை, தங்களை(சிவனை)ப் பூஜை செய் பவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு எல்லாவித மான பாக்கியங்களையும் தந்து முடிவில் மோட்சத்தையும் அளிக்க வேண்டும். அருள்புரியுங்கள் என்று அன்னையானவள் வேண்டிக் கொண்டாள்.

சிவபெருமானும், அப்படியே ஆகட்டும் என்று கூறி அருள் புரிந்தார். அந்த இரவே "சிவராத்திரி" என வழங்கப்பட்டு அனைவராலும் கொண்டாடப்படுகிறது.

பகல் பொழுது பரமேஸ்வரனுக்கும், இரவுப் பொழுது அம்பிகையான உமாதேவிக்கும் உரியது என்பது நியமம். ஆனால் சிவராத்திரி என்பது அம்பாளின் வேண்டுதலின்படி கொண்டாடப் படுவதால் அது சிவனுக்கு உரியதாயிற்று.

– முதன்மை செய்தியாளர்

அழகுராஜா

தொலைபேசி எண்: 9994162182




## உயர்குலம், தாழ்ந்த குலத்தை வேறுபாடு பார்க்காத ஸ்ரீதர வெங்கடேச அய்யாவாள்

# சிரார்த்தம் செய்து வைத்து உணவு உண்ட சிவபெருமான்

மிகச் சிறந்த சிவ பக்தராக விளங்கிய ஸ்ரீதர வெங்கடேச அய்யாவாள். எவரேனும் பட்டினியுடன் தன் வீட்டு வாசலுக்கு வந்தால் முதலில் அன்னதானம் செய்து விட்டுத் தான் மறுவேலை பார்ப்பார்.

ஒருமுறை அவரது தந்தையின் சிராா்த்த தினத்தன்று ஊரில் தாழ்ந்த குலம் என்று பிரித்துவைத்திருந்த ஒருவா் பசி என்று வந்திட, சாஸ்திரப்படி செய்யப்பட்ட உணவுகளை எடுத்துக் கொடுத்து உண்ணச் செய்தாா்.

இதனால் கோபம் கொண்ட வேத விற்பன்னா்கள், "நீா் கங்கையில் நீராடி இப்பாவத்தை கழுவினால் தான் உம்முடைய வீட்டில் உன் தகப்பனாா்க்குாிய சிராா்த்த காாியங்களை செய்வோம்" என வர மறுத்தனா். திகைத்த அய்யாவாள் அவ் ஊாில் குடிகொண்டுள்ள மகா லிங்க சுவாமிகளை மனமுறுகி வேண்டினாா்.

அவரது வேண்டுகோளை ஏற்று, சிவன் பிரம்மா விஷ்ணு ஆகிய மூவருமே வைதிகா்களைப் போல் உருகொண்டு அய்யாவாள் இல்லத்திற்கு வந்தனா்.

பிரம்மா விஸ்வதேவா் ஆகவும், ருத்ரன் பித்ரு ஸ்தானத்திலும், மஹா விஷ்ணு மஹாவிஷ்ணு ஸ்தானத்தில் பிரதியட்சமாக இருந்து சிராா்த்த காாியங்களை மிகச்சிறப்பாக காாியத்தை முடித்துவிட்டு கிளம்பினா்.

அன்று மாலை திருவிடைமருதூா் கோவிலைத் திறந்த அா்ச்சகா் கருவரையில் மூலவா் மகாலிங்க சுவாமி மீது புது வஸ்திரம் சாற்றி, சிரசில் துளசிதளம், எள், தா்ப்பை இருப்பதைக் கண்டு திடுக்கிட்டாா்.

மேலும் சிவபெருமான் அசாீாியாக "இன்று ஸ்ரீதர அய்யாவாள் வீட்டு உணவை சாப்பிட்டு இருப்பதால் உபவாசம் அதனால் மாலை நைவேத்தியம் மற்றும் தீபாராதனை வேண்டாம்" என்று இறைவனின் குரல் ஒலித்தது.

இதை அா்ச்சகா் அப்படியே கிராமத்தினுள் சென்று சொன்னபிறகு தான் அய்யாவாளுக்கே தன் வீட்டிற்கு வந்து சிராா்த்த காாியங்களை செய்தது இறைவனே என்று தொிந்தது. உண்மையான பக்தாின் நோ்மையான விருப்பங்களை இறைவன் நிறைவேற்றுவாா் என அனைவரும் தொிந்து தெளிந்தனா்.



# நொய்டா, செக்டார் 62, ஸ்ரீ விநாயகா மற்றும் ஸ்ரீ கார்த்திகேயா கோவிலில் 'அனுஷம் பூஜை' மற்றும் கும்பாபிஷேக பணி






நொய்டா, செக்டார் 62, ஸ்ரீ விநாயகா மற்றும் ஸ்ரீ கார்த்திகேயா கோவிலில் 'அனுஷம் பூஜை' வேத பிரசார சன்ஸ்தான் (VPS) நிர்வாகம், பக்தர்களின் நலன்களை கருத்தில் கொண்டு, இருபது மாதங்களுக்கும் மேலாக 'அனுஷம்' நட்சத்திர பூஜையை நடத்தி வருகிறது. பிப்ரவரி மாதம் 23 ஆம் தேதி மாலை, அனுஷம் பூஜை சிறப்பாக கொண்டாடப்பட்டது.

'ஜெய ஜெய சங்கர ஹர ஹர சங்கர' என்ற கோஷங்களுக்கு மத்தியில், பூஜை தொடங்கியது. பக்தர்கள் ஸ்ரீ மஹாபெரியவா ஸ்ரீ சந்திரசேகர சரஸ்வதியை போற்றி பக்தி பாடல்களை பாடிக் கொண்டிருந்தனர். அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. மகா தீபாராதனை, மற்றும் பிரசாதங்கள் வழங்கப்பட்டு நிகழ்ச்சி நிறை வடைந்தது.

இந்த அனுஷம் பூஜை, ஜூலை 2020 இல் தொடங்கியது, 'மனிதகுலத்தின் நலன் மற்றும் உலகளாவிய அமைதிக்கான' நோக்கத்துடன் உலகம் முழுவதும் கடுமையான சுகாதார நெருக்கடி மற்றும் பல உயிர்கள் கொள்ளை நோயால் அவதிப்பட்ட நேரத்தில், தொற்றுநோய் காரணமாக, உலகம் முழுவதும் பாதிக்கப்பட்டிருந்தனர்.



எஸ்.வெங்கடேசன்

இந்த இக்கட்டான நேரத்தில்தான் அனுஷம் பூஜையை வாத்தியார்களான ஸ்ரீ பி சங்கர வாத்தியார், ஸ்ரீ டி டி ஸ்ரீராம் சாஸ்திரிகள் மற்றும் ஸ்ரீ மணிகண்டன் ஆகியோர் தொடர்ந்து செய்து வருகின்றனர்.

கோயில் நிர்வாகம் வாராந்திர குழு பாரா யணங்களையும் நடத்துகிறது: ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம், ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாமம், ஸ்ரீ கந்த சஷ்டி மற்றும் ஸ்ரீ கந்தர் அனுபூதி மற்றும் ‘முருக கோஷம்’. இன்றைய தினத்தில் பாரா யணம் செய்யப்படுகிறது.

தற்போது செக்டார் 62ல் உள்ள ஸ்ரீ விநாயக மற்றும் ஸ்ரீ கார்த்திகேயர் கோவில் கும்பாபி ஷேகம் இந்த ஆண்டின் பிற்பகுதியில் நடைபெற உள்ளது.

இதற்காக, இரவு பகலாக உழைக்கும் தமிழகத்தின் பூம்புகா ரைச் சேர்ந்த ஸ்தபதி ஸ்ரீ ஜி வினோத் தனது குழுவினருடன் கோயில் நிர்வாகம் ஈடுபட்டுள்ளது.

– எஸ்.வெங்கடேசன், நொய்டா
தொடர்பு எண் போன்:
9811161370



# மகாசிவராத்திரி விழாவும் மயான கொல்லை நிகழ்வும் அறிய வேண்டிய அற்புதம்

ஒவ்வொரு ஆண்டும் மாசி மாத அமாவாசை நாளில் எங்கெல்லாம் அங்காள பரமேஸ்வரி ஆலயம் இருக்கின்றதோ அங்கெல்லாம் மயானக் கொள்ளை விழா நடைபெறுகிறது.

ஆனால் பெரும்பாலும், தற்போதுள்ள தலை முறையினர் பலருக்கு மயானக் கொள்ளை என் றால் என்ன என தெரியாத விஷயமாக உள்ளது.

சனியின் விளையாட்டால், சிவனின் திருமணத் தின் போது, அதற்கு புரோகிதம் பார்த்த ஐந்து முகனாக இருந்த பிரம்மனுக்கு ஒவ்வொரு தலைக்கும் தனித்தனியாகத் தட்சிணை வழங்க வேண்டும் என கேட்க, சிவனும் அப்படியே செய்தார்.

நான்கு தலைகளுக்கு நான்கு திசைகளில் நின்று தட்சிணை வழங்க, ஐந்தாவது தலைக்கு இதுவரை நின்று கொடுக்காத திசையில் நின்று தட்சிணை கொடுக்க வேண்டும் என பிரம்மன் கேட்டார்.

வட கிழக்கு, தென் கிழக்கு, தென் மேற்கு, வட மேற்கு என திசைகள் கலவாமல் இருக்க வேண்டும் என்ற விதியும் கூற, எந்த திசையில் நின்று தட்சிணை கொடுக்க என தெரியாமல் சிவபெருமான் தவித்தார்.

அப்போது பிரம்மனோ என்னை முடி காண சென்ற போது செய்த தவறை பெரிதுபடுத்தினீர்களே, தற்போது தட்சிணை கூட கொடுக்கமுடியாத நீங்கள் எப்படி பரம்பொருள் ஆவீர்கள் என கேட்க, சினத்தால் பிரம்மனின் ஒரு தலையை கொய்து, இனி நீ நான்முகன் என அழைக்கப்படுவாய் என்றார். அதோடு உனக்கு இனி தனியாக ஆலயங்கள் இருக்காது என சிவன் கூறினார்.

**பிரம்மனின் சாபம்:** தலையை கொய்த சிவ பெருமானுக்கு பிரமஹத்தி தோஷம் ஏற்பட்டது. அதோடு, பிரம்மனின் அந்த தலை ஈசனின் கையிலேயே இனி ஒட்டி இருக்கும். அதில் இடப்படும் உணவு பாதி அந்த கபால ஓடே தின்று விடும். எப்போதும் நிரம்பாது. அப்படி அந்த ஓடு நிரம்பினால் தான் உன் சாபம் தீரும் என சாபமிட்டார்.

சிவபெருமானுக்கு ஏற்பட்ட இந்த பிரம்மஹத்தி தோஷத்தின் காரணமாக சிவபெருமான் யாசகம் பெற்று தனது பசியை ஆற்றிக்கொண்டிருக்கும் நிலை ஏற்பட்டது, யாசகம் பெறும் உணவின் பாதியை கபாலம் தின்று தீர்த்ததால், சிவனின் பசி அடங்கவில்லை.

உலகிற்கே படி அளக்கும் எம்பெருமான், சாபத்தால் பிச்சை எடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டார். எந்த முனிவர்கள், தேவர்கள் பிச்சை இட்டும் அது நிரம்பாமல் இருந்தது. அதனால் சிவனுக்கே உணவு இல்லாமல் போனது.

இந்த பிரம்மஹத்தி ஒரு சாபமாக சிவனை பின் தொடர்ந்து கொண்டிருந்தது. சிவபெருமானை சாபத்திலிருந்து மீட்பதற்காக அங்காள பரமேஸ்வரி அவதாரம் எடுக்கும் நிகழ்வு நடைபெற்றது.

அதன்படி,

தன் கணவரின் தலையை கொய்ததால் கோபத்தில் இருந்த சரஸ்வதி பார்வதிக்கு, ‘கொடிய உருவத்துடன் பூவுலகத்தில் திரிவாய்’ என சாபமிட்டாள்.

அதன் படி பார்வதி தேவி பூவுலகில் பல ஸ்தலங்களில் அலைந்து திரிந்தார். கடைசி யாக மலையனூர் வந்து அங்கு அங்காள பரமேஸ்வரி யாக கோயில் கொண்டாள்.

சிவனும் அந்த மலையனூர் வர, சிவனின் கையிலிருந்த கபாலம் விழ மகாலட்சுமி ஒரு யோசனை கூறினாள். அதன் படி பரமேஸ்வரி செய்த சுவையான உணவை சிவனின் கையில் இருந்த கபாலத்தில் இரண்டு முறை உணவிட்டாள். உணவு மிக ருசியாக இருக்க, மூன்றாவது முறை பரமேஸ்வரி கொடுக்கும் உணவை சாப்பிட ஆவலாக இருந்தது.

கபாலத்தில் மூன்றாவது முறையாக உணவை இட சென்ற போது தவறுதலாக கீழே விழுந்தது போல கீழே போட்டாள். உடனே அந்த உணவை சாப்பிட அந்த கபாலம் சிவனின் கரத்தை நீங்கி கீழே போனது.

உடனே அங்கு அங்காள பரமேஸ்வரியாக இருந்த பார்வதி தேவி விஸ்வ ரூபமெடுத்து, பிரம்மனின் கபாலம், மீண்டும் அவரின் கையில் வந்து ஒட்டிக் கொள்வதற்குள், அதனை காலால் மிதித்து, பூமியில் ஆழ்த் தினாள். இதனால் ஈசனுக்கு ஏற்பட்ட பிரம்மஹஸ்த்தி தோஷமும் அகன்றது.

இந்த சம்பவத்தின் அடிப்படையில் தான் இன்றளவும் மயானக் கொள் ளை நிகழ்வு கொண் டாடப்பட்டு வருகின்றது.






புனிதவேல்

மகா சிவராத்திரி தினத்திற்கு அடுத்து வரும் அமாவாசையில் இந்த மயான கொல்லை நிகழ்வு மிகவும் பிரபலமாக கொண்டாடப்பட்டு வரு கிறது.

தொகுப்பு: புனிதவேல்

தொடர்பு எண்: 9841807572

இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க

**aanmeegamalar.com**

இணையதளத்தை பார்க்கவும்
























# நோய்களை குணமாக்கும் மானாமதுரை ஆனந்தவல்லி சோமநாதர்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் வைகை ஆற்றுக்கரையில் அற்புதங்கள் நிறைந்த ஸ்ரீஆனந்தவல்லிசோமநாத சுவாமி திருக் கோயில் உள்ளது இக்கோவில் ஆதி காலத்தில் வில்வ வனகாட்டில் இருந்ததால் வில்வ வன ஷேத்திரம் என்று அழைக்கப்பட்டு வந்து உள்ளது சந்திர பகவான் தனக்கு தட்சண் இட்ட சாபத்தால் தொழுநோய் ஏற்பட்டு அது நீங்க கோவில் முன் உள்ள சந்திர புன்கரணி தீர்த்தத்தால் நீராடி வில்வ வனகாட்டில் இருந்த அம்மனையும் சிவபெருமானை வணங்கி தொழுநோய் நீங்கியதாகவும் நோய்கள் தீர்ந்து ஆனந்தம் அடைந்ததால் ஆனந்தவல்லியாகவும் சோமநாதராகவும் ஒரு மண்டலம் வணங்கி ஆனந்தம் அடைந்தான் என கூறப்படுகிறது.

பெருங்குளமாக இருந்த புஷ்கரணி தற்போது ஒரு சிறிய கிணறாக உள்ளது. மதுரை மீனாட்சி அம்மன் ஆட்சி காலத்தில் பின்வைகை ஆறு இங்கு வந்துள்ளது அதேபோல் மலிக்காபூர் படையெடுப்பின் போது நாயக்க வம்சத்தால் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரரை இங்கு உள்ள வனகாட்டில் மறைத்து வைத்து பாதுகாத்து பின் மதுரை சென்றதாகவும் கூறப்படுகிறது.ராமயன காலத்தில் ராமர் தனது வானர படைகளுடன் இங்கு தங்கி ஆனந்தவல்லி அம்மனையும் சுயம்புலிங்கமாக உள்ள சோமநாதரை தரிசித்து ராவணனை வென்றதாகவும் கூறப்படுகிறது. மானசு சஞ்சரே என்று பாடிய ஸ்ரீசதாசிவ பிரம் மேந்திராள் ஒரே நேரத்தில் மானா மதுரை ஆனந்தவல்லி அம்மன் கோவில் கரூர் மாவட்டம்

நெரூர் மற்றும் ஓம்கார் காசி கராச்சி ஆகிய இடங்களில் ஓர் ஜோதி வடிவில் ஜுவசமாதி அடைந்ததாக கூறப்படுகிறது .

இங்கு உள்ள ஸ்ரீ சதாசிவ பிரேம்மேந்திராள் சன்னதி முன்பு மனம் முருகி வேண்டும் போது தீராத நோய்களும் நீங்குவதாக நம்பப்படுகிறது. மானாமதுரையில் ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் இந்தியாவின் உள்ள அனைத்து இசை கலைஞர்களும் மூன்று நாள் இங்கு தங்கி ஸ்ரீ சதாசிவ பிரேம்மேந்திராள்

இசை ஆராதனை நடத்தி வழிப்பாட்டடும் செல்கின்றனர் மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகிய சிறப்புகளுடன் துன்பம் நீங்கி நோய்கள் போக்கி ஆனந்த தலமாகவும் இம்மை பயனளிக்கும் மோகன சுந்தர தலமாகவும் உள்ளது.

பாஞ்சால மன்னர் ஸ்தூல கர்ணன் வில்வக் காட்டை அழித்து பட்டணம் உருவாக்கி வெள் ளை நிறத்தோடு கூடிய சுயம்பு மூர்த்தியாம் சிவலிங்கத்தை வணங்கி ஆலயம் கட்டியதாக கூறப்படுகிறது. ஆனந்தவல்லி அம்மன் கோபுரம் முன்பு நின்ற நிலையில் உள்ள விநாயகர் தனி சன்னதியும் சூரியன் சந்திரன் கால பைரவர் வள்ளி தெய்வானை சுப்பிரமணிய சுவாமி சன்னதிகளும் உள்ளது வில்வகாட்டில் இருந்ததால் தல விருட்ச மரம் வில்வத்துடன் கூடிய சிவதலமாக உள்ளது.ஆண்டு தோறும் மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயில் எப்படி திருவிழா நடைபெறுகிறதோ அதேபோல் இங்கு சித்திரை திருவிழா ஆடித்தபசு நவராத்திரி சதாசிவபேந்திராள் இசை ஆராதனை போன்ற விழாக்கள் நடைபெறுகிறது. மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரரை பாதுகாத்த வில்வ காடாகவும தொழுநோய் பாதிக்கப்பட்ட சந்திர பகவான் குணமடைந்தாலும் அகத்தியர் மாணிக்கவாசகர் போன்றோர் வணங்கி ஆனந்தம் அடைந்தாலும் வானர படைகளுக்கு பசி நீங்கியதாலும் ஸ்ரீ சதாசிவ பிரேம்மேந்திராள் ஜுவசமாதி அடைந்து முக்தி பெற்றாலும் அற்புதங்கள் நிறைந்த கோவிலாக ஆனந்தவல்லி சோமநாதசுவாமி திருக்கோயில் உள்ளது. மதுரை இராமேஸ்வரம் செல்லும் வட இந்திய யாத்திகள் சுற்றுலா பயணிகள் தினமும் இங்கு வந்து வழிபட்டு செல்கின்றனர் மதுரையில் இருந்து இராமேஸ்வரம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் வைகை கரையில் மானாமதுரை ஆனந்தவள்ளி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா
தொலைபேசி எண்: 9994162182











பாரம்பரியமான,
சத்தான, சுவையான
சமையல் குறிப்புகளை
மிக எளிமையாகவும்,
தெளிவாகவும் அறிந்து கொள்ள
**கீதாசமையல்**
(geetha samayal)
youtube சேனலை பாருங்கள்




geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்

# ஆன்மீக வழியில் அமைதி

நாம் மோட்சத்தினை அடைவதற்கு விவேகம் விதை போன்று செயல்படுகிறது. நமது வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவைகளான பணம் படிப்பு வேலை ஆகியவற்றை துறக்க வேண்டும் என்று எந்த இந்து சாஸ்திரமும் இதிகாசங்கள் புராணங்கள் அறிவுறுத்தவில்லை. வாழ்க்கைக்கு அடிப்படையானவைகள் அவசியம் தேவை ஆகும். அவைதான் உலக வாழ்க்கைக்கு மிகவும் பாதுகாப்பானது ஆகும்

உன் உலக கடமைகள் பூர்த்தியான பிறகு ஆன்மீக சாதனைகளில் ஈடுபட்டு மோட்சம் அடைவதற்கு உரிய பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். சிலபேர் வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தியான பிறகும் அதில் மயங்கி மூழ்கி விடுகிறார்கள். அதிலிருந்து விடுபட அவர்களது மனம் விரும்புவதில்லை. அப்படிப்பட்டவர்களுக்கு விவேகம் என்ற ஞானம் வந்து விடும்போது அவர்கள் உலக வாழ்க்கையில் திருப்தி அடைந்து விடுவார்கள். மீண்டும் அவர்கள் மீண்டும் உலக இன்பங்களில் ஈடுபடுவதற்கு விரும்புவதில்லை.

வாழ்க்கையின் அடிப்படை தேவைகளை விட்டுவிட்டு துறவறம் மேற்கொள்ள வேண்டும் என்று சாஸ்திரங்கள் எதுவும் கூறவில்லை. உண்மையில் ஞானம் மோட்சம் அடைவதற்கு விரும்புகின்றவர்கள் உலகில் உள்ள இன்பங்களில் அவன் அனுபவிக்க நேர்ந்தாலும் மோட்சம் என்னும் ஞானம் அடைய வேண்டும் என்னும் விவேகம் அவனுக்குத் துணை புரியும். உலகில் ஆசைகளுக்கு முடிவே இருக்காது. நாம்தான் போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து என்று உலக இன்பங்களிலிருந்து விலக வேண்டும். அவ்வாறு விலகினால்தான் நாம் ஆன்மீகத்தில் முன்னேற்றம் காண முடியும். உலக இன்பங்களில் தாமரை இலைத் தண்ணீர்போல் இருந்து வாழ்ந்து பழக வேண்டும்.

நாம் சத்சங்கத்தில் கலந்து கொண்டால் மோட்சம் என்ற உயர்நிலை அடைவதற்கு ஓரளவு அவை துணை புரியும். நாம் எதில் ஆசை கொள்ள வேண்டுமோ அதில் மட்டும் ஈடுபட்டு ஆன்மீகத்தில் முன்னேற்றம் காண வேண்டும். ஆன்மீகத்தில் முன்னேற்றம் அடைவதற்கு சத்சங்கம் நமக்கு வழிகாட்டுகிறது. அதேபோல் ஆன்மீக வழியில் வாழ்ந்து கொண்டு இருப்பவர்களிடம் நட்பு கொண்டு அதன் மூலம் நாம் ஆன்மீக அனுபவங்களை பெறவும் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். சத்சங்கத்தில் அடிக்கடி கலந்து கொள்ள வேண்டும். அவ்வாறு சத்சங்கத்தில் கலந்து கொள்ளும்போது ஆன்மீக அன்பர்கள் அவர்கள் பெற்ற அனுபவங்களை நம்மிடம் கூறுவதைக்


www.aanmeegamalar.com

36

கேட்டு அதன்படி வாழ்ந்து நாமும் ஆன்மீக வழியில் அமைதி காணலாம்.

நமது மனம் சஞ்சலத்தில் இருக்கும்போது அவற்றிலிருந்து விடுபடுவதற்கு சத்சங்கம் ஒரு வடிகால்போல் துணைபுரியும். நமது மனதிற்கு ஒரு ஆறுதல் கிடைப்பதோடு ஒரு தெளிவான தீர்வு கிடைக்கும். நமது மனம் பஞ்சுபோல் இலேசாகும். நாம் கோவிலுக்குச் சென்றால் இறை சிந்தனையில் இருக்கும்போது, நமது மனம் எப்படி தேவையற்ற எண்ணங்கள் ஏற்படுவதில்லையோ, அதேபோல்தான் சத்சங்கத்தில் கலந்து கொள்ளும்போது இறைவனை மட்டும் நினைக்கச் செய்யும். ஆன்மிகம் பற்றி கருத்துக்கள் எண்ணும்படி செய்யும். ஆன்மீகப்பாடல்கள் இசை, புராணங்கள் இதிகாசங்கள் போன்றவை மட்டும் கேட்கும்படியாக இருக்கும். மனிதர்களை நல்ல செயல்களில் மட்டும் ஈடுபடச் செய்யும் என்பதை சத்சங்கத்தில் கலந்து அனுபவம் மூலம் அறிந்து கொள்ளலாம்.

இளம் செடியாக இருக்கும்போது அதனை வேலியிட்டு பாதுகாக்க வேண்டியது அவசியம். இல்லாவிட்டால் ஆடுமாடுகள் மேய்ந்து அந்த செடியை அழித்து விடும். அதேபோல் இறைவனை அடைய வேண்டுமானால் ஆரம்பத்தில் சாது சங்கங்கள் கோவிலில் தெய்வ வழிபாடுகள் தேவை. வாழ்வில் இடையிடையே தனிமையில் வாழ்வது அவசியம். அப்போதுதான் இறைவனை அடைவதற்கு மிகுந்த ஆர்வம் ஏற்படும்.

மோட்சம் அடைவதற்கு நாம் தீவிர ஆசை கொள்ள வேண்டும். மோட்சத்தில் ஆசை அதிகரிக்க அதிகரிக்கத்தான் அது செயல்வடிவம் பெறுவதற்கு முடியும். உலகில் எந்தப்பொருள் மீது ஆசை கொள்கிறமோ அதன் சம்பந்தப்பட்டவைகளை நாம் நாடிச் செல்வோம். எடுத்துக்காட்டாக ஒருவர் சங்கீத வித்வான் ஆக வேண்டும் என்று விரும்புகிறார் என்று வைத்துக் கொள்வோம் அவர் பெரும்பாலும் சங்கீதம் தொடர்பானவைகளே நாடுவான். அவர் சங்கீதத்தில் தேர்ச்சி பெற்ற குருவை நாடுவான். அவர் சங்கீதம் சம்பந்தப்பட்ட நூல்களை தேடிச்சென்று வாங்கிப் படிப்பார்கள். அவர் குரல் வளம் பெறுவதற்குரிய சாதனைகளை சங்கீத வித்வான்களை கேட்டு அதனை மேற்கொள்வார்கள். இதேபோன்றுதான் மோட்சம் அடைவதற்கு ஆன்மீகத்தில் முன்னேறுவதற்கு தேவையான வழிமுறைகளைத் தேடித் தேடி ஆன்மீகப் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

சிலபேர் மோட்சம் அடைய வேண்டும் என்று விரும்புவார்கள் ஆனால் அதில் தீவிர ஆசையோ முயற்சியோ மேற்கொள்வதில்லை. காரணம் மோட்சம் அடைவதற்கு உண்மையிலே அவர்கள் மனதளவில் விரும்புவது இல்லை. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் என்பதை மனதில் கொண்டு மோட்சம் அடைவதற்கு மன அமைதி பெறுவதற்கு முயற்சியை மேற்கொள்ள வேண்டும். சிலபேர் ஆன்மீகப் பயிற்சியை செய்வதற்கு முயற்சி செய்வார்கள் அதில் விடாமுயற்சியுடன் நம்பிக்கையுடன் ஆன்மீகப் பயிற்சிகளை மேற்கொள்வதில்லை. ஒருவன் ஐம்பது அடியில் தண்ணீர் வந்து விடும் என்ற எண்ணத்தில் நிலத்தினை தோண்ட ஆரம்பிக்கிறான் என்று வைத்துக் கொள்வோம்.

நாற்பத்தொன்பது அடிகள் வரை தோண்டி விட்டு மனம் சலிப்படைந்து இன்னும் ஒரு அடியில் எப்படி தண்ணீர் வரும் என்று தோண்டுவதை நிறுத்தி விட்டு வேறொரு இடத்தில் தோண்ட ஆரம்பித்து விடுகிறான். ஆனால் மற்றொருவன் அதே இடத்தில் ஒரு அடி தொண்டியவுடன் அந்த இடத்தில் தண்ணீர் வந்து விடுகிறது. நாற்பத்தொன்பது அடி தோண்டியவனுக்கு ஒரு அடி தோண்டி முடிப்பதற்குள் பொறுமையில்லாமல் வேறு இடத்தில் தோண்டுவதற்கு முயற்சி செய்து விட்டான். இதேபோல்தான் சிலபேர் பொறுமையில்லாமல் ஆன்மீகத்தில் முன்னேற வேண்டுமென்று பயிற்சி செய்கிறார்கள். சில மாதங்கள் பயிற்சியினை மேற்கொண்டு சலிப்படைந்து நம்பிக்கையின்மையால ஆன்மீகப் பயிற்சி மேற்கொள்வதையே விட்டு விடுகிறார்கள்.

ஆன்மீகத்தில் நாம் முன்னேற்றம் அடைந்துள்ளோம் என்பதை எப்படி தெரிந்து கொள்வது அல்லது உணர்ந்து கொள்வது. ஆன்மீகத்தில் உண்மையிலே நாட்டம் அடைந்தவர்களுக்கு முன்னேற்றம் காண்பவர்களுக்கு, உலகில் காணும் இன்பங்கள் பொருட்கள் மீது ஏற்படும் ஆசைகளில் நாட்டம் இயல்பாகவே குறைந்து விடும். ஆன்மீகப் பயிற்சியின்போது உலக இன்பங்கள் ஆசைகளில் மீண்டும் மீண்டும் மனம் ஈடுபட விருப்பப்பட்டால் ஆன்மீகத்தில் முன்னேறவில்லை என்பதை உணர்ந்து கொள்ளலாம். உலகத்தில் காணும் இன்பங்களில் உள்ள தீவிர ஆசை ஆன்மீகத்தில் இல்லை என்பது யதார்த்தமான உண்மை என்பதை நன்கு உணரலாம்.

ஆன்மீகத்தில் தீவிர நாட்டமிருந்தால் எந்த தடை வந்தாலும் உடல் அளவில் மனதளவில் தைரியம் கிடைக்கும். மேலும் சத்சங்கம் எங்கெல்லாம் நடக்கிறது என்பதை தேடி அதில் கலந்து கொள்வதற்கு மனம் நம்மையறியாமல் நாடும். சத்சங்கத்தில் ஆன்மீக அன்பர்கள் கூறும் ஆன்மீகப் பயிற்சியினை செய்வதற்கு மனம் ஆர்வம் ஏற்படும். அவ்வாறு ஆன்மீகத்தில் நாட்டமில்லை என்றால் வெளிப்படையாக கூறாமல் சத்சங்கத்தில் கலந்து கொள்ள முடியாமைக்கு ஏதாவது காரணம் கூறி தப்புவதற்கும் தட்டிக் கழிப்பதற்கும் நினைப்பார்கள். ஆன்மீகத்தில் எந்த அளவுக்கு நாட்டம் ஆசை இருக்கிறதோ அந்த அளவுக்கு அவன் செயல்பாடுகள் இருக்கும். அவ்வாறு ஆன்மீகத்தில் நாட்டம் இல்லை என்றால் செயல்பாட்டிலும் ஆர்வம் இருக்காது என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம்.

உலகில் நேர்மையாக இருத்தல், தர்ம நியதிப்படி வாழ்க்கையை நடத்துவது, உயிர் இரக்கம் கொள்வது அதாவது எல்லா உயிர்களும்

இன்புற்றிருக்க வேண்டும் என்ற மனநிலையில் வாழவேண்டும். அதன்மூலம் நமக்கு ஆன்மீக வழியில் மன அமைதியும் கிடைக்கும். அவ்வாறு நாம் ஆன்மீக வழியில் உணர்வுபூர்வமாக வாழ்ந்துவரும்போது நமக்கு இறைவன் ஆன்மீகத்தில் முன்னேற்றம் அடைவதற்கு பெரிதும் துணைபுரிவார். இதனை நாம் அனுபவ பூர்வமாக உணரமுடியும். இதனைத்தான் ஆன்மீக ஞானிகள் நாம் இறைவனை நோக்கி ஓரடி எடுத்து வைத்தால் இறைவன் நம்மை நோக்கி பத்தடி முன்னே வருவார் என்று கூறுவார்கள்.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

பதினெட்டு சித்தர்கள் தங்கள் அனுபவம் மூலம் மனஅமைதிக்கு கண்டறிந்த அறிய பொக்கிஷம் தியானம் ஆகும். தியானம் என்பது மனதினை ஒருமுகப்படுத்துவது ஆகும். மனதில் உண்டாகும் எண்ணங்கள் ஒளியின் வேகத்தை விட அதிகமான வேகத்தினைக் கொண்டது என்று சித்தர்களால் கூறப்பட்டுள்ளது. தியானத்தின் தன்மை எப்படி இருக்கும் என்று ஸ்ரீராமகிருஷ்ணர் “தராசில் ஒரு தட்டில் எடைகூடினால் கீழ்முள்ளும் மேல் முள்ளும் ஒரே நேர்கோட்டில் நிற்காது.கீழ் முள்தான் மனம், மேல் முள்தான் கடவுள். கீழ்முள் மேல் முள்ளுடன் ஒன்றுபட்டு நிற்பதுதான் தியானம் ஆகும்‘ என்று எளியமுறையில் விளக்கிக்கூறுகிறார்

மனம் தியானத்தில் அமர்ந்தவுடன் நமக்கு எண்ண அலைகள் நிகழ்ந்து கொண்டே இருக்கும். நமது வாழ்வில் கடந்து போன நிகழ்வுகள் இன்ப துன்பங்களை அப்போது நினைக்கச் சொல்லும். வாழ்வில் எதிர்காலத்தை நினைத்து பயமுறுத்தும் எண்ணங்களும் நம்மையறியாமல் வந்து கொண்டே இருக்கும். இதெல்லாம் தியானத்தின் தடைக்கற்கள் அல்லது இடர்பாடுகள். இந்த இடர்பாடுகளைக் கடந்து நமது மனம் நிகழ்காலத்தினை நினைத்துகொண்டே இருக்க வேண்டும். அவ்வாறு நினைத்துக் கொள்ளும்போது தியானம் கைகூடும். நாம் விடும் மூச்சுக்காற்றை கவனித்துக்கொண்டு தியானம் செய்யலாம்.

நாள்தோறும் காலை மாலை தியானம் செய்து வருவதால் நாம் விரும்பும் தேடும் மன அமைதி கிடைக்கும். தியானத்தின் மூலம் மனதை கடந்த காலத்திற்கு நமது எண்ணங்களை கொண்டு செல்லாமல் அவ்வாறு மனம் சென்றாலும் வலுக்கட்டாயமாக நிகழ் காலத்திற்கு கொண்டு வருவதற்குப் பழகவேண்டும். அதேபோல் மனதினை எதிர்காலத்திற்கு குரங்கைப்போல் தாவிச் செல்லும்படி விட்டு விடாமல் மனதினை நிகழ்காலத்திற்கே கொண்டு வருவதற்கு தியானப் பயிற்சியை தவறாமல், மேற்கொண்டால் நமது மனதிற்கு அமைதி கிடைக்கும்.

தியானத்தில் நாம் அமர்ந்திருக்கும்போது எண்ணங்கள் நதியைப்போல் மனமானது ஓடிக் கொண்டே இருக்கும். அதனை நாம் கிணற்று நீரினைப்போன்று ஓரிடத்தில் நிலைத்து நிற்கும்படி மனதிற்கு பயிற்சி அளிக்க வேண்டும். அதற்கு மூச்சுப்பயிற்சியினை மேற்கொள்ளலாம். நாம் விடும் மூச்சினை கவனித்து கொண்டே வரும்போது மனம் மற்ற உலக விஷயங்களில் செல்லாமல் தடுக்க முடியும். மூச்சுப்பயிற்சி எளிதுபோல் தோன்றும். நாம் மூச்சு விடுவதை அது வெளியே செல்லும்போதும் உள்ளே வரும்போதும் கவனித்துக் கொண்டே வரவேண்டும். அதனால் மனம் ஒரு நிலைக்கு வரும் என்று கூறுவதற்கு முடியாது.. மூச்சைக் கவனித்துக் கொண்டே இருக்கும்போது மனதில் எண்ணங்கள் வேறு எங்கு சென்றாலும் உடனே நம் விழிப்படைந்து எண்ணங்களை மூச்சினை கவனிப்பதிலேயே கவனம் செலுத்தினால், நம் தியானத்தின் மூலம் வாழ்வில் அமைதி கிடைக்கும்.

தியானம் செய்வது எப்படி என்று சிந்தித்துப் பார்த்தால், அமைதியான காற்றோட்டமான தனியறையில் அமர்ந்து தியானம் செய்ய வேண்டும். தியானம் செய்வதற்கு அதிகாலை நேரத்தில் பிரம்மமுகூர்த்த நேரமான அதிகாலை மூன்றரை மணிக்கு மேல் ஐந்து மணிக்குள் செய்வது நன்கு பயன் அளிக்கும். தினமும் நாம் குறிப்பிட்ட நேரத்தில் தியானத்தில் அமர்ந்து அரைமணி நேரம் தியானப்பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். தியானம் செய்வதால் நமக்கு மன அமைதி கிடைப்பதோடு மனதிற்கு ஒரு புத்துணர்ச்சியும் ஏற்படுவதை நமது அனுபவம் மூலம் உணரமுடியும்.

நாம் தியானம் செய்யும்போது நம்மையும் அறியாமல் நண்பர்கள் உறவினர்களின் நலம் பற்றி எண்ணினால் தியானத்தின் மூலம் நமக்கு அமைதி கிடைப்பதுபோல், சம்பந்தப்பட்ட நபருக்கும் அவர்கள் தியானம் செய்யாமலே நாம் செய்யும் தியானத்தின் மூலம் நன்மை மன அமைதி கிடைக்கும் என்று ஞானிகள் கூறுகின்றனர். மனம் அமைதியடையாவிட்டால் யோகம் கைகூடாது. யோக த்தை அசையாத சுடருக்கு ஒப்பிடலாம். காற்றின் வேகத்தால் தீபம் அசைகிறது அதேபோல் உலகியல் ஆசைகளால் மனம் சலனமடைகிறது. மனம் சஞ் சலப்படாமல் அமைதியாக இருந்தால் யோகம் கைகூடிவிட்டது என்று பொருள். தியானத்தின் மூலம் நாம் தேடும் விரும்பும் அமைதி கிடைக்கும்.

**எழுத்தாளர்பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

எங்கள்
சேவைக்கு
உங்களின்
உதவிக்கரம்



# விருப்ப சந்தா



தொடர்ந்து வெளிவரும் நமது இதழுக்கு
உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள்
**ரூ.10** முதல் தங்கள்
வசதிக்கேற்ப விருப்ப சந்தா செலுத்தி
எங்கள் பணிக்கு உதவலாம்.

**சந்தா அனுப்புபவர்கள்,**
**கீழ்காணும் ஸ்கேனர் மற்றும்**
**வங்கி எண் வாயிலாக சந்தா செலுத்தலாம்**

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI
G Pay | पे | Paytm | BHIM Baroda Pay | BHIM | BharatPe

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**